பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹூ தை-மீ 24-உ (6—2—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 41.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி

### பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஹூ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர்திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதறாஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதறாஸ்.

## திருப்பூர்

### சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு

### அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேமநிதிப் பண்டு லாட்டரிச் சீட்டு.

**சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3331 பிரைஸ்கள்.**

1வது பிரைஸ் ரூ 3000, 2வது பிரைஸ் ரூ 1500, 3வது பிரைஸ் ரூ 1000, 4வது பிரைஸ் ரூ 500, 5, 6வது பிரைஸ் ரூ 200.

100 ரூபாயில் 5பிரைஸுக்கு ரூ 500, ரூ 50ல் 20க்குரூ 1000, ரூ20ல் 50க்கு ரூ 1000, ரூ 10ல் 100க் குரூ 1000, ரூ 5ல் 200க்கு ரூ 1000, ரூ 3ல் 600க்கு ரூ 1800, ரூ 2ல் 2400க்கு ரூ 4800 ஆக பிரைஸ் 3331-க்கு ரூ 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனிப்பிரைஸ் ரூ 1700, பண்டுக்கு ரூ 9000, ஆக ரூ 33000.

1. (4—5—1927) பிரபவஞு சித்திரைமீ 22உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2, 33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையாகுமானால் சுவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் சுவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1வது பிரைஸ் முதல் 6வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4 பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை யனுப்பக்கூடும்.

5 சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ☞ சூ. ஆ. முத்துநாடார், பத்திராதிபர், "நாடார் குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சூ. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்,
அருப்புக்கோட்டை.

**இனும்! இனும்!!**
**டேபில் டயம்பீஸ் இனும்!!!**



**(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)**

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "ரோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் டைசிங் வாட்ச விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பாக்னி வாட்ச் அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

## மகேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.
படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா
படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.

## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2–4–0. 6-அவுன்ஸ் 1–3–0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை.

**இனும் இனும்!!**

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

**வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.**

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

## ரூபாய் 500 இனும்!
## நல்லெண்ணெ.

சுத்தமான எள்ளு எண்ணெக்கு உத்திரவாதம் செய்கிறோம்.

மணிலாக்கொட்டை கடலை எண்ணெ கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணெ கிடைப்பதோ மிகவும் துர்லபம்.

இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவே தனியாக செக்குஏற்படுத்தி நமது நேர் கண்பார்வையில் திடமான எள்ளாக வாங்கி சுத்தம்செய்து நல்ல வெல்லம் கலக்கி தனியாக ஆட்டி விற்கிறோம். இதில் ஏதாவது கலப்படம் இருக்கிறதாக நிஜூ செய்கிறவர்களுக்கு 500 ரூபாய் இனும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

வி. ரங்கசாமி செட்டியார்,
கச்சேரி வீதி, "குடி அரசு" ஆபீசுக்கு
அடுத்த கட்டடம், ஈரோடு.

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, மதராஸ்

## நம்பிக்கையான வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள் கதர் துணிகள் மருந்துகள் கடிகாரம் ஷாப் சாமான் முதலிய இதர எல்லா சாமான்களும் கிடைக்கும். முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

விலாசம்:—

**என். தண்டபாணி கம்பெனி.**
தபால் பெட்டி 292.
6–99 பவழக்காரத்தெருவு,
சென்னை

## பிராமணரல்லாதார் கட்சி வகுப்புத் துவேஷமுடையது என்பது சரியா? தப்பா?

(முன் தொடர்ச்சி)

[சைவல்ய சாமியார் எழுதுவது]

தன்னலவெறியின் யோகங்களில்லாமல் நம் தேசத்தவர்களை விசால நோக்கத்துடன் பார்க்கும் பிராமணன் ஒருவனாவது உண்டா? ஒரு சமயம் அப்படியாராவது இருந்தபோதிலும் அவரை மற்ற பார்ப்பனர்கள் இழிவுசெய்து பகைத்தி புத்தியைப் பிரமிக்கச் செய்யத்தக்க பற்பல விதமான தந்திரங்களும், உபாயங்களும், நிறைந்த செற்பிரயோகங்களும், வியாக்யானங்களும் செய்து அப்படிப்பட்டவர்களின் எண்ணங்கள் வெளிப்படாமல் செய்து விடுகிறார்கள். இத்தகையோர்களை "குடி அரசு" குற்றஞ் சொல்லாமல் இருக்கமுடியுமா? எத்தனையோ தேசங்கள் சிறப்புற்றோங்கி உயர்ந்த நிலையடைந்து அதிகார வைபவத்தால் பூரிப்புடன் வாழ்ந்து வருகையில் நாமும் நம்தேசமும், நமது கூட்டத்தாரும், உயர்வடைய சுவாமி விவேகாநந்தர் சொன்னதுபோல் அதாவது:—"இந்தியாவில் எவ்விதத்திருத்தங்களைச்செய்யவேண்டுமாயினும் முதலில் மத விஷயத்தை சீர் திருத்தவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இக்கொள்கையைத்தான் 'குடி அரசு" மேற்கொண்டு அதற்குத் தடையாயிருப்பவர்களின் குற்றத்தை அகற்றப் பாடுபடும் முயற்சியில் என்ன துவேஷமிருக்கிறது? என் வியாசம் நீண்டுவிடுகிறதென்னும் குற்றத்தைப் பொறுத்து விஷயத்திலுள்ள உண்மைகளை ஆராய்ச்சி செய்து உலக அனுபோகங்களை ஒட்டி, உங்கள் தைரியமான புத்தி எதை நிச்சயப்படுத்துகிறதோ அதை நடக்கையில் கொண்டுவாருங்கள். இக்காலத்தில் ஜாதியாசாரங்களில் எத்தனை குறுகியநோக்கங்களும், அநாசரீகமும், மடமையும, இருந்தபோதிலும், உண்மைகண்டவர்களின் சார்பிலிருந்து யாதொரு ஆட்சேபமும் பிறக்கவில்லை. உண்மை பக்கத்தார் இதற்கெல்லாம் இடம் கொடுத்தே பேசுகின்றார்கள்—அல்லது மௌனமாயிருந்துவிடுகிறார்கள். அல்லது பழைய ஏற்பாடு சரி அப்படியேதானிருக்கவேண்டும். சாஸ்திரத்திற்கு சம்மதமில்லாவிட்டாலும் வழக்கத்திற்குச்சம்மதமென்கிறார்கள். நீங்கள் இப்பொழுது செய்து வருவதெல்லாம் எந்தவழக்கத்திற்குச் சம்மதமென்று கேட்டுவிட்டால் வகுப்புத் துவேஷி என்று சொல்லிக் கூத்தாடுகிறார்கள். உங்களுக்கெல்லாம் தெரிந்ததொன்றைச்சொன்னால் திருஷ்டாந்தரமாகுமென நினைக்கிறேன்—பாலக்காடு கல்பாத்திரதோற்சவம் பார்க்க தீயர்கள் [நாடார்கள்] போகக்கூடாது என்று தடுக்கப்பட்டார்கள். முனிசிபாலிடி பணத்தால் காங்கிரீட்டு போட்டு, டிச்சு கட்டி, விளக்குப்போட்டு, தினமும் கூட்ட ஆளும், குப்பையெடுக்கவண்டியும், கொல்லை எடுக்க தோட்டியும், முனிசிபாலிடியிலிருந்து வைத்திருக்கிறார்கள். பொது ஸ்தாபனாஸ்தாவில் எல்லோரும் போகலாமென்று கவர்மெண்டு உத்தரவுமிருக்கிறது. இந்த உத்தரவை நம்பியும், பொது ஸ்தாவாதலாலும், மூன்றுவருடம் நாடார் வகுப்பு வக்கீல் ஸ்ரீமான் ராகவன் என்பவரின் தலைமையின் கீழ் சில நாடார்கள் சேர்ந்துரதோற்சவம் பார்க்கப்போனார்கள். பிராமணரென்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள் இவர்களை அடித்து கொடுமையாய் நடத்தித் துரத்திவிட்டார்கள். இந்த ரதோற்சவத்திற்கு மகமதியர்கள், கிருஸ்தவர்கள், தாராளமாகப் போகலாம். இந்து மதஸ்தர்களான நாடார்கள் உள்ளே விடப்படவில்லை என்னும் சங்கதி தெரிந்து மௌலவிகளும் பாதிரிகளும் ஆரிய சமாஜத்தவர்களும் நாடார்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்ள பிரசங்கமும் பிரயத்தனமும் செய்தார்கள். ஆரியசமாஜத்தார் இந்து மதத்தை அடிப்படையாக உடையவர்களானதால் இதில் சேர்ந்த நாடார்களை உள்ளே விட தகராறுகள் நடந்தும் நடந்துகொண்டுமிருக்கிறது. மற்ற இரண்டு மதத்தில் சேர்ந்தவர்களை மறுக்க நம்மையில் அதிகாரம் இல்லை என்பது பார்ப்பனர்களுக்குத்தெரியும். காங்கிரசென்றும், தேச ஒற்றுமை என்றும், முன்னேற்றமென்றும், சுயராஜ்யம் என்றும், சொல்லும் பார்ப்பனர்கள் இந்த நாடார்களுக்கு பரிந்து வந்து தங்களது அனுதாபத்தைக்காட்டினார்களா? அப்படிக்கில்லாமல் ஐகோர்ட் வக்கீலான ராகவன் என்னும் நாடார் வக்கீலை அடித்தார்கள், டிச்சில் தள்ளினார்கள். இதில் எந்த காங்கிரஸ் வாதிகளாவது வக்கீல்களாவது பரிதாபப்பட்டார்களா? பாலக்காட்டுச் சேர்மென் காங்கிரஸ் வாதியாயிற்றே அவராவது கவனித்தாரா? கனம் ராகவன் வீட்டுக்கு இரண்டு நாள் சென்றிருந்தேன், அவர்கள் கூட்டத்து நாடார்களும் சில தமிழர்களும் தவிர உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்ளுகிறவன் ஒருவனாவது அங்கில்லை. "இந்து"வாவது "சுதேசமித்திர"னாவது ரிப்போர்ட் தவிர தனி ஒரு தலையங்கமோ குறிப்போ எழுதினதுண்டா? வருடா வருடம் ஆட்சேபணை வந்துகொண்டிருக்கின்றதே தலைவரென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எவராவது இதற்கு என்ன பரிகாரம் தேடினார்கள்? நம்மவரில் பௌருஷமும், போர்க்குணமும் உடைய ஜாதியாரை நாம் இப்படி இம்சை செய்து அன்னிய மதத்திற்கு ஓட்டுவதும் அங்குபோய் அவர்கள் மதப்பற்றாலும், நாம் முன் செய்த கொடுமையின் பாவத்தாலும், நம்மையும் நம் சாமியையும் உதைப்பதும் நாம் கா, கூ, வென்று ஓலமிட்டோடி வெள்ளைக்காரர் காலில் விழுந்தும் உங்களுக்கு அப்படித்தான் வேண்டுமென்று அவன் மனதில் நினைத்து தலையை அசைத்து ஆதரிப்பதும் பின் அதிகாரிவர்க்கம் இங்கிலீஷ் சட்டத்தை சரியாய் நடத்தவில்லை ஆதலால் எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்றுகேட்பதும் உங்களுக்கு சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் எல்லோரையும் சமமாய் நடத்தாமல் இம்மாதிரிதான் செய்வார்கள்; ஆதலால் உங்கள் ராஜ்யம் கலகத்தில்தானே முடியும். நீங்கள் அதற்கு லாயக்கில்லை என்று அவர்கள் சொல்லுவதும், இது போனால் போகட்டும் உத்தியோகமாவது கொடுங்கள் என்று நாம் கேட்பதும், உத்தியோகத்தை பெரும் தன்மையாக நடத்த எங்களூரான சீமையில் இரண்டு வருஷமாவது நீங்கள்பழகவேண்டும் என்று அவர்கள் சொல்லுவதும் அதற்காக அவர்களைத தொங்குவதும் ஆகிய இதுகளே நடந்து வரும் காரியமாக இருக்கிறது. இதை விபரப்படுத்துகிறவர்கள் துவேஷிகளென்று தூற்றப்படுகிறார்கள். பௌருஷமும், போர்க்குணமும் உடைய ஜாதிகள் அன்னிய மதத்தில் பிரவேசிக்க நம மத ஏற்பாடுகளே காரணமாக இருக்கிறதே என்று சுயராஜ்யக்கட்சியாரோ, சாஸ்திரிகளோ, அய்யங்கார்களோ, அய்யர்களோ கொஞ்சமாவது கவலை கொண்டு யாதொரு வித ஏற்பாடுகளும் செய்வதில்லை. பசியினாலும், மழை குளிரினாலும் தானும் தன் பெண்சாதியும் வைக்கத்தில் பதிமூன்று லட்சம் நாடார்களுக்காகக் கஷ்டப்பட்டுத தான் இரண்டு தடவை ஜெயில் புகுந்து ஒருவாறு அவர்களுக்கு பாத்தியதையை வாங்கிக்கொடுத்த ஸ்ரீமான் நாயக்கரையும், அவர் கூட்டத்தாரையும் வகுப்புத்துவேஷிகள் என்பதில் எவ்வளவு கொடுமை இருக்கிறது? மற்ற ஜாதியார் பெருமையடைவதிலும், முன்னுக்கு வருவதிலும் பார்ப்பனர்களின் தூற்றலும் கோபமுமே அவர்கள் பேப்பர்களில் நிறைந்துகிடக்கிறதென்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். மேல் நாட்டில் பாதிரிகளின் கொடுமையும் செல்வாக்கும் வீழ்த்தப்பட்டபின்பே ராஜ்ஜியம் சிறப்பாக அமைக்கப்பட்டதென்பது இங்கிலீஷ் படித்த ஒவ்வொருவரும் படித்ததில்லையா? அதுபோலவே இங்கும் குருக்களாலும் புரோகிதர்களாலும் அவர்கள் கூட்டத்தார்களாலும், ஜனக்கூட்டத்தின் முற்போக்கிற்கு தடையாயிருக்கும் ஏற்பாடுகளை அகற்றச்செய்யும் முயற்சியை வகுப்புத்துவேஷமென்றும், ஜாதிப்பகையென்றும், சொல்லி ஜனங்களை பழைய மௌடீகத்திலேயே ஏன் வைத்திருக்கப் பிரயத்தனப்படவேண்டும்? தனிதனி பேசுகையில் இங்கிலீஷ் படித்த பார்ப்பனன் ஒத்துக்கொள்ளுகிறானே ஒழிய ஒன்று சேர்ந்து மௌடீகம் போக பிரயத்தனம் ஏதாவது செய்கிறார்களா? இது ஒன்றே அவர்கள் சுபாவத்தை கண்டுபிடிக்கப்போதும்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்னும் குற்றம் அவர்கள்பேரில் சுமத்தப்பட்டிருக்கிறது. உத்தியோகம் ஒரே கூட்டத்தாருக்குப்போகப்படாது, எல்லோருக்கும் சமமாகப்பங்குபோட்டுக் கொடுக்கவேண்டும் என்பது அவர்கள் கட்சியின் கொள்கை. பிராமண கட்சி சொல்வதுபோல் பிராமணரல்லாத உத்தியோகவேட்டைக் கட்சியைத்தொலைத்தாய் விட்டதே இப்பொழுது இருக்கும் உத்தியோகத்தை வேட்டையாடுகிறது யார்? வேட்டையாடுவதையே பிராமணன் விட்டு விட்டானா? உத்தியோகமே ராஜாங்கத்திலிருந்து எடுத்துவிட்டார்களா? என்னும் கேள்விக்கு நியாயமானபதிலுண்டா? ஜஸ்டிஸ் கட்சியினால் உத்தியோகமடைந்த குடும்பங்களின் நன்மையே அந்த கட்சி பிராமணரல்லாதாருக்குச் செய்த நன்மையில் ஒன்று; இது ஒன்றேதான் பிராமணனுக்குப் பொறுக்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியினால்தான் நாங்களும் மந்திரிகளானோம் என்று கனம் ரெங்கநாத முதலியார் சொன்னது சரியல்லவா? தேசத்தையும், ஜனங்களையும், விட்டுக்கொடுத்துத் தங்கள் கூட்டத்தையே அன்னியர் அலட்சியப்படுத்தும படியாய் எத்தனை பிராமணர் உத்தியோகமும், பெரிய பதவியும் அடைந்திருக்கிறார் என்னும கதைகள் வந்து மறைந்து சரித்திரததிலுமெழுதப்பட்டிருக்கிறது. ஜனங்களின் மௌடீக அறிவையும் ஏமாற்றி ஏமாற்றி பழகின தங்கள் புத்தியின் சாமார்த்தியத்தையும் நினைக்கவல்லவா கொஞ்சப்பட்டணத்திற் காசைப்பட்டு பிராந்தி பாட்டலை சுதேசமித்திரன் விடவில்லை. இவர்கள் தானா மதுவிலக்கைத்தொலைப்பவர்கள் இதற்கெல்லாம் பார்ப்பானையே என் குற்றம் சொல்லவேண்டும்? வரிசைக்கிரமமாக கீழ் மேல் ஜாதி இருந்துகொண்டுவருகிறதே என்றால் பார்ப்பனர்தான் இதற்கெல்லாம் காரண பூதம். அவனிடந்தான் இதன் முடிச்சு இருக்கிறது, அவன் இந்த முடிச்சைத் தளர்த்தினால் பின் எல்லாக்கட்டும்அவிழ்ந்து விடும். இவ்விஷயத்தைபடித்து அறிவு வந்த அநேக மேதாவிகளும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் உயர்ந்தவர்களும் இப்படியே சொல்லுகிறார்கள்.

---

மதுரை அமெரிக்கன் காலேஜில் சமபந்தி போஜனம் 22—1—27 சனிக்கிழமையன்று காலேஜ் ஹாஸ்டல் நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு சமபந்தி போஜன விருந்து ஒன்று மிகச் சிறப்புடன் நடைபெற்றது. சமார் 350 பேருக்குக் குறையாமல் வந்திருந்தனர். காலேஜ் பிராமண மாணவர் 160 பேருள் 5, 6 பேர் தவிர மற்றவர்கள் எல்லாரும் ஆத்திரத்தோடு ஒத்துழையாமை நடத்திவிட்டார்களென ஸ்ரீமான் ஜி. வெங்கட்டராமன் அறிவிக்கிறார்.

## புரோகிதத் தாராசங்கம்.

புரோகிதத்தாராசங்கம் என்ற தலைப்புக் கொடுத்திருப்பதைப்பற்றி வாசகர்கள் வியப்படையக்கூடும். உங்களில் சிலராவது "தாராசசங்கம்" என்ற நாடகம் பார்த்திருக்கலாம் அதில், கொட்டகையில் போடுபவர்கள் முக்கியமாய் தாரை, சந்திரனுக்கு பிறந்த மேனியாய் என்னை தேய்க்கும்பாகம் வெகு ஆச்சரியமென்றும் அதற்கு மூந்துங்கள் என்றும் எச்சரிப்பார்கள். அங்கும தாரை வேடம் பூண்டவர் பெண்ணாக இருக்கும்பக்ஷத்தில் நாடக அபிமானிகள் முன்னாடியே விஜயம் செய்து அந்தப்பாகத்தை எதிர் பார்ப்பார்கள். தாரை சற்றேறக்குறைய உடம்பு தெரியக்கூடிய சல்லாவுடை தரித்து நடித்தபோதிலும், வினையா போட்டுசில் கண்டதற்கு மாறுபட்டு நடத்துகிறீர்கள்? என்பார்கள். அப்போது நாடகக்காரர்கள், மன்னிப்புக் கேட்பதுண்டு. சிலர் நோட்டீசில் கண்டபடி செய்கிறோம், எல்லோருக்கும் சம்மதமா? என்பார்கள்; அப்போது விவாதம் ஒருவாறாய் ஒழியும். இது தாரகசங்கம். புரோகிதத் தாராசங்கம் பின்வருமாறு.—நான் 23-ந் தேதி மேலைச்சிதம்பரமென்னும் திருப்பேரூருக்கு போய் காலையில் 7 மணிக்கு காஞ்சிமா நதியில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தேன். மலையாள வாசிகளாகிய எழு பேர், மூவர் பெண்கள் நால்வர் ஆண்கள் தோற்றத்தில் நடுத்தர அந்தஸ்துடையவராகக் காணப்பட்டார்கள். இவர்களில் மூத்த ஆண்பாலவருக்கு வயது ஐம்பது இருக்கும். அவருக்கு மட்டும் சொற்ப தமிழ் தெரியும். மற்றவர்களுக்கு 40, 30, 25-வயதிருக்கும் பெண்களில் மூத்தவருக்கு 60 இருக்கும்; இளையவயதுள்ள ஒருத்திக்கு 25 இருக்கும்; மற்றிருவரும் 35–40 வயதுடையவர்கள். இவர்களெல்லோருக்கும் ஒரு வார்த்தை கூட தமிழ் தெரியாது. இவர்கள் ஏதோ பிதுர்க்கடன் செய்வதற்காக நதிக்கு ஸ்நானம் செய்யவந்தபோது அவர்கள் ஊரில் இடுப்பில்மட்டும் ஒரு சமயம் முண்டு கட்டியிருக்கலாம்; இந்த நாட்டில் அவ்வழக்கம் இல்லாமையாலும் அநேகமாய் மலையாளத்து ஜனங்கள் படிப்பு முதலிய நாகரீகங்கள் பெற்றுவிட்டபடியாலும், நமது நாட்டில் முதல் அந்தஸ்துடைய பெண்கள் நமது நாட்டாரைப் போலவே நடையுடை அனுஷ்டித்து வருவதாலும் மேலே கண்ட ஸ்திரீகளும் மேலே துண்டுபோட்டுக்கொண்டே வந்தார்கள். இவர்களெல்லாம் நதியில் ஸ்நானம் செய்தவுடன் சுமார் 30 வயதுள்ள புரோகிதர் வந்து எல்லோரையும் வேஷ்டிகளை இடுப்பில் கட்டிக்கொள்ளும்படி சொல்லி வரிசையாக குத்துக்கால் வைத்து உட்காரும்படி செய்து, சமஸ்கிருதத்தில் கடகடஎன்று ஏதோ மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு உருக்கட்டைகள்போல் எதிரே உட்கார்ந்திருக்கிற இவர்களை வலது கால் மண்டியிடு, இடது கால் மண்டியிடு என்று சுமார் முக்கால் மணி நேரம் வாட்டி வதைத்துவிட்டார். இந்தக்காட்சியை நதிக்குவந்த ஆண் பெண் பலரும பார்த்தேபோனார்கள். புறச்சமயக்காரர்கள் எள்ளி நகையாடினார்கள். நான் புரோகிதரை ஒன்று கேட்க விரும்புகிறேன். ஐயா! இந்த ஜனங்களை நீர் மனிதராக நினைத்தீரா? உங்கள் வகுப்பினராயிருந்தால், இம்மாதிரி மானங்கெட சடங்கைச்செய்வீரா? இம்மலையாளப்பெண்களை மாதிரி காண்பித்து, இந்த நாட்டுப் பெண்களையும் சடங்குக்கு அழைக்க எண்ணமா? பெண்களுக்காகிலும் மேலே துணி போடும்படி அனுமதித்திருந்தால் உம்முடைய மந்திர பலம் சிதறியாகாமல் சுவர்க்கத்திற்கு ஏணிமேல் ஏறிப்போய்க்கொண்டிருக்கிறவர்களின் பிதுர்கள் ஏணி முறிந்து கீழே தவிர்ந்துவிடுவார்களா? உங்களுக்குக் கொஞ்சமேனும் இந்து மதப்பற்றிருந்தால், புறமதத்தினர்கள் நகைக்கும்படி இம்மாதிரி இழிவாக நடந்துக்கொள்வீர்களா? கொடுமை! கொடுமை!! பார்ப்பனரல்லாத மக்களே! இப்பேர்ப்பட்ட புரோகிதர்களாகிய இதர வகுப்பினர்களைக் கொண்டு எந்த சுப அசுப சடங்குகளும் செய்யாதீர்கள். உங்களுக்கு சடங்குகளில் நம்பிக்கையிருந்தால் உங்களினத்தாரைக் கொண்டே செய்யுங்கள்.

நீங்கள் நான் என்னை இன்னாரென்று தெரிவித்துக்கொள்ளாததற்கு மன்னியுங்கள். நான் சுமார் 7-8 வருஷங்களாக பார்ப்பனர்களைக் கொண்டு திதி வகையரா செய்வதில்லை. அன்று என் சக்திக்குத்தக்கபடி எனது பந்துக்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னம் கொடுத்து வருகிறேன். அடுத்த வாரம் முதல் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளில் எனக்கு சாவகாசம் ஏற்படும்போது சடங்குகளை நம்மவர்களைக்கொண்டு செய்வதுதான் பலன் தரும் என்ற விஷயமாய் எனக்குத் தெரிந்தவரை இரண்டொரு கட்டுரை எழுதிவர விரும்புகிறேன். ஆசிரியர்கள் தயவுசெய்து இடமளிக்கும் பக்ஷத்தில் அப்போது என்பெயரையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இக்கடிதம் வெட்கப்படக்கூடியதாயிருப்பதால் என்னைப்பற்றி எனக்கே அருவருப்பு ஏற்படக்கூடும். ஆகையால் பத்திரிகை ஆசிரியர்களுக்குமட்டும் என் பெயரை தெரிவித்துக்கொண்டிருக்கிறேன்.

உண்மையுரைப்போன்.

---

## ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களுக்கு மாயவரத்தில் அளித்த வரவேற்பு பத்திரங்கள்.

1. ஈரோடு உயர்திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு சிறப்போழுகும் சித்தர்காட்டினர் அளித்த வரவேற்புப பத்திரம்.

தண்டமிழ்நாட்டு மாபெரும் தலைவ! தங்கள் வரவு நல்வரவாகுக.

தாங்கள் பலவாண்டுகளாக நமது நாட்டினர் முன்னேற்றமடைய பல துறையிலும் உழைத்து வருவதை நாங்கள் அறிவோம். இன்று சமூக சமத்துவத்தை நிறுவுதற்கும், ப்ராஹ்மணீய ஆதிக்கத்தை குலைப்பதற்கும், தீண்டாமையை ஒழிப்பதற்கும், கதரைப் பெருக்குவதற்கும் தாங்கள் எழுத்தாலும், பேச்சாலும் முயன்று வருவது இத்தேச முழுவதும் ஓர் நூதன உணர்ச்சியை ஊட்டியுள்ளது.

இத்தகைய சிறப்பும் ஊக்கமும் உடைய தங்களை வரவேற்பதின் பாக்கியம் எங்களுக்களித்த தங்களுக்கு மனமார்ந்த வந்தனம் அளிக்கின்றோம.

தாங்கள் மென்மேலும் நமது மக்கள், சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற உழைக்க ஆண்டவன் தங்களுக்கு தீர்க்க ஆயுளையும் ஆரோக்ய திடகாத்திரத்தையும் அருளுவாராக. இங்ஙனம்,

சித்தர்காடு மக்களின் சார்பாக,

K. சபாபதி.

2. வளம் கொழிக்கும்ஈரோடு உயர்திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு மாயவரம் நகராண்மைக் கழகத்தார் அன்புடனளித்த வரவேற்புப் பத்திரம்.

சீலமிக்க ஐயா!

தங்கள் வரவு நல்வரவாகுக.

இச்சோழவளநாட்டின் புண்ணியத்தலங்களிலொன்றாகிய இடமயூரத்தில் தங்கள் வரவு நல்வரவாகுக.

நம் தமிழ்நாடு பல்வளத்தால் நிறையும் பொருட்டு தாங்கள் செய்துவரும் தொண்டு மிகவும் உபயோகமானதாகுக.

நம் பாரதநாடு கல்வியிலும், அரசியல் துறையிலும், சமூக சேவையிலும், முற்போக்கடைய தாம் செய்துவரும் தொண்டு போற்றற்பாலதே.

நம் நாட்டுக் கைத்தொழிலாம் கதர் அபிவிருத்தியில் தாங்கள் அனவரதமும் ஈடுபட்டு உழைத்து வருவது அவசியம் என்பதை நாங்கள் போற்றுகின்றோம்.

தாங்கள் நம் நாட்டு மக்களின் பிறப்புரிமைக்கும் தன் மதிப்பிற்கும போராடி வருவதை நாங்கள் செவ்வனே யறிவதுடன், அதில் எமது பூர்ண அநுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.

தனக்கென வாழாது பொதுஜன ஊழியத்திற்கு உழைக்கும் தாங்கள் அன்றென்றும் ஆரோக்ய திடகாத்திரராய்வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

நகராண்மைக் கழகத்து அங்கத்தினர்கள்.

---

3 சீர்மிகு ஈரோடு உயர்திரு ஈ வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு மாயவரம் பிராமணரல்லாதார் நலவுரிமைச் சங்கத்தார் அன்புடன் அளித்த வரவேற்புப்பத்திரம்.

எம்தலைவ!

தங்கள் வரவு நல்வரவாகுக.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இவண் வந்த தங்களுக்கு எங்கள் உளமகிழ்ந்த வந்தனம் உரிமையாகிறது. நாங்கள் சகல துறைகளிலும் விடுதலை பெற்று, உண்மை குடி அரசை நிலை நிறுத்த அல்லும் பகலும் உழைத்து வரும் தங்களுக்குத் தமிழ் உலகு என்றும் கடமைப்பட்டுள்ளது.

தாங்கள் ஊட்டிவரும் புது உணர்ச்சியினால் எங்கள் அடிமைப் புத்தியை ஒழித்துளோம் என்பதையும், மேலும் தன் மதிப்பை நிலை நிறுத்தவே உழைக்க முவந்துள்ளோம் என்பதையும் தங்களுக்கு மகிழ்ச்சயுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மக்களுள் ஏற்றத்தாழ்வுளதாய் காட்டும் மாய நீதிகளை தகர்க்கும் துறையில் தங்கள் வழி பற்றி நடக்க எழுந்த இச் சங்கம் என்றும் நின்று செழிக்க, ஆசிர்வதிக்குமாறு தங்களைப் பணிந்து வேண்டுகின்றனம்.

தமிழர்களுடையவும், சிறப்பாக தாழ்த்தப்பட்டவர்களுடையவும் முன்னேற்றத்திற்கென அவதரித்த வீர!

எவ்வகையினும் கைம்மாறு செய்ய இயலாத நாங்கள், தங்களுக்கு நீண்ட ஆயுளையும், தேக வலிமையையும், எல்லாம் வல்ல இறைவன் அருளுமாறு வழுத்துகின்றோம்.

இங்ஙனம், தங்களன்பர்கள்,

பிராமணரல்லாதார் நலவுரிமைச் சங்கத்தார்.

---

சேலம் செவ்வாய்ப்பேட்டை ஸ்ரீ சாம்பலிங்க மூர்த்தி சமாஜம்—நாளிது 14—2—27ந் தேதி திங்கட்கிழமை வருடாந்திர குருவாராதனை ஷை குரு பரம்பரையாரால் நடைபெறுமென பிரவிபேண்டு தொ. ரு. குமாரசாமி செட்டியாரறிவிக்கிறார்.

## தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலும் பார்ப்பன பத்திரிகைகளும் நமது கோரிக்கையும்.

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தெரிந்தெடுக்கப் பட்டது கொண்டு நமது பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் பொறாமை என்னும்போதையில் பட்டு கண்டபடி உளறுகிறார்கள். இத்தேர்தலில் நடந்த தப்பிதம் என்ன என்பதையும் இதனால் யாராவது பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு நிற்பது ஞாய விரோதமாய்த் தடைப்பட்டுவிட்டதா என்பதையும் ஒருவராவது எழுதவேயில்லை. தலைவர் பதவி காலியாவதற்கு முன்னாலேயே தேர்தல் நடத்திவிட்டார் என்று ஒரே மூச்சாக சத்தம் போடுகிறார்கள். இது ஸ்ரீமான் பன்னீர்செல்வம் தானாகவே நடத்திய தேர்தலா கவர்ன்மெண்டாரே இந்தப்படி தேர்தல் போடும்படி உத்திரவு அனுப்பினார்களா என்பதை தெரிவிக்காமல் விழுங்கிக் கத்துவதின் ரகசியம் என்ன? எப்படியாவது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தின்பேரில் பாமர ஜனங்களுக்கு ஒரு கெட்ட அபிப்பிராயத்தை உண்டாக்கவேண்டும் என்கிற அயோக்கியத்தனமே அல்லாமல் இதில் வேறு ஏதாவது யோக்கியப்பொறுப்பு இருக்கிறதா? இம்மாதிரியே ஒரு பார்ப்பனப் பிரசிடெண்டும் கொஞ்சகாலத்திற்குமுன் செய்துகொண்டதைப் பற்றி இப்பார்ப்பனப் பத்திரிகைகள் ஏன் கேட்டிருக்கக்கூடாது? இதற்கு நியாயமிருக்கிறது என்று சொன்ன பார்ப்பன அட்வொகேட் ஜனரலை ஏன் கண்டிக்கக் கூடாது? காலாவதிக்கு முன்னால் தேர்தல் நடத்தலாம் என்று தீர்ப்புக்கொடுத்த பார்ப்பன முனிசீபு, பார்ப்பன ஜட்ஜு ஆகியவர்களை ஏன் கண்டிக்கக்கூடாது? அன்றியும் இதனால் யாருக்கு என்ன நஷ்டம் வந்துவிட்டது. யார் வீட்டுப் பெரியவாள் தேடிய சொத்தை யார் எடுத்துக்கொண்டார்கள்? ஜில்லா போர்டு என்பது எல்லாருக்கும் பொதுவேயொழிய பார்ப்பனர்களுக்கு பழைய காலத்திய முட்டாள் அரசர்கள் விட்டது போன்றமானியமும் அல்ல, அக்கிரஹாரமுமல்ல. அப்படியிருக்க ஸ்ரீமான் பன்னீர்செல்வம் மாத்திரம் வரக்கூடாது என்பதற்கு காரணம் என்ன? இதற்குமுன் பிரசிடெண்டாயிருந்த வி. கே. ராமாநுஜாச்சாரியார் யோக்கியதையைவிட எந்தவிதத்தில் பன்னீர்செல்வத்தின் யோக்கியதை கெட்டுப் போய்விட்டது ஸ்ரீமான்? ராமாநுஜாச்சாரியார் காலத்தில் சத்திரம், சாவடி, பள்ளிக்கூடம், உத்தியோகம் எல்லாம் பார்ப்பன மயமாயும், முக்கியமாய் அய்யங்கார்கள் சாப்பிடும் அன்ன சத்திரமாயும் இருந்து வந்தது யாருக்கும் தெரியாதா? இப்போது ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அந்த ஸ்தானத்துக்கு வந்ததும் ஸ்ரீமான் ராமாநுஜாச்சாரியரைப்போல் இருந்திருப்பாரேயானால் பிராமணர்களை எல்லாம் வெளியில் துரத்திவிட்டு வெறும் கிறிஸ்தவ மயமாகவே ஜில்லா போர்டை செய்திருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல், ஸ்ரீமான் பன்னீர்செல்வம் யோக்கியரானதால் அம்மாதிரி செய்யாமல் எல்லோரும் பொறுக்கித்தின்னும்படியாகவும், கணக்குப்பார்த்தால் பார்ப்பனர்களே தங்கள் அளவைவிட எண்மடங்கு அதிகமாய் பொறுக்கித் தின்னும்படியாகவும் வைத்துக்கொண்டிருக்கிறார். இதற்கு பிரதி உபகாரம்தான் இப்பார்ப்பனர்கள் போடும் சத்தம்போலும். பாம்புக்கு பால் வார்த்தால் கடிக்காமல் இருக்கும் என்று நம்புவதுபோல் இருக்கிறது பார்ப்பனருக்கு உதவி செய்தால் அவர்கள் அதை அறிவார்கள் என்று எண்ணுவது! இனி, இதுமுதலாவது ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு நியாய உணர்ச்சி ஏற்பட்டு பார்ப்பனர்களுக்கு மாத்திரம் நல்ல பிள்ளையாய் நடக்கவேண்டும் என்கிற எண்ணத்தை மறந்து எல்லா சமூகத்தாருக்கும் அவரவர்கள் அளவுக்குத் தகுந்தபடி நியாயம் வழங்கிவருவார் என்று நினைக்கிறோம். எதில் செய்தாலும் செய்யாவிட்டாலும் முக்கியமாய் பள்ளிக்கூட உபாத்தியாயர் இலாகாவில் மாத்திரம் கண்டிப்பாய் 100-க்கு 90க்கு குறையாத பார்ப்பனரல்லாத உபாத்தியாயரையே நியமிக்க வேண்டும். யோக்கியதாம்சம் பெற்ற உபாத்தியாயர்கள் இல்லையானால் பார்ப்பனரல்லாதாரிலேயே உபாத்தியாயர் படிப்புக்காக பணம் கொடுத்து ஒரு வருஷம் உபாத்தியாயர் தொழிலுக்கு படிக்கச்செய்து அவர்களையே நியமிக்கவேண்டும். முக்கியமாய் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகள் படிப்பதில்லை என்று சொல்லப்படுவதற்கும் போதுமான படித்த பிள்ளைகள் கிடைக்காமல் போவதற்கும் அநேகமாய் பார்ப்பன உபாத்தியாயர்களே காரணம் என்பதை அநேக வழிகளில் கண்டுபிடித்தாய்விட்டது. ஜில்லா தாலூகா போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் படிப்புக்கு படிப்புக்கு என்பதாகச் செலவுசெய்யும் பணங்கள் எல்லாம் ஒரு கூட்டத்தார் படிப்புக்கே பிரயோஜனப்படுகிறதே அல்லாமல் பொதுமக்களுக்கு உதவுவதே கிடையாது. ஆகையால் இவைகள் எல்லோருக்கும் உதவவேண்டுமானால் பார்ப்பனரல்லாதாரைப் பிடித்து நூற்றுக்கணக்காக உபாத்தியாயர் வேலைக்கு அனுப்பவேண்டும். அந்த ஸ்தாபனங்களில் நூற்றுக்கு இத்தனை உபாத்தியாயர்கள்தான் பார்ப்பனர்களாயிருக்கலாமென்றோ அல்லது நூற்றுக்கு இத்தனை உபாத்தியாயர்கள் பார்ப்பனரல்லாதார்களாயிருக்கவேண்டுமென்றோ தீர்மானம் செய்துகொண்டு அவற்றை நிறைவேற்றி வைக்கவேண்டும். இதனால் கொஞ்ச காலத்திற்கு படிப்பு பாதிக்கப்படும் என்பதாக பார்ப்பனர்கள் கூச்சல்போட்டாலும் பிறகு நமக்கு அபரிமிதமான லாபத்தைக் கொடுக்கும். கூடுமான வரையில் தலைமை உபாத்தியாயர்கள் வேலையில் பார்ப்பனரல்லாதாரையே நியமிக்க வேண்டும். யோக்கியமான பார்ப்பன உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவரை விட அயோக்கியமான பார்ப்பனரல்லாத உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவரே பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் லாபகரமுள்ளவராயிருப்பார். ஏனெனில் யோக்கியமான பார்ப்பனன் என்பவனின் இயற்கை குணமே பார்ப்பனரல்லாதாரை இழிவாயும் தாழ்மையாயும் கருதுவதுதான். பார்ப்பனனுக்கு பிறவியிலேயும் பழக்கத்திலேயும் வழக்கத்திலேயும் பார்ப்பனரல்லாதாரிடத்தில் அருவருப்பு ரத்தத்தில் ஊறிகலந்திருக்கிறது. இதை எவ்வழியிலும் அவர்கள் மறைக்க முடியாது. அநேகமாய் மறைப்பதுமில்லை. பள்ளியில் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயரே தான் உயர்ந்த ஜாதியான் என்றும் படிப்பிக்கப்படும் பிள்ளை தாழ்ந்த ஜாதியான் என்றும் உணர்ச்சி உள்ளவராயிருந்தால் அவனிடம் படிக்கும் குழந்தைப் பிள்ளைகளுக்கு எப்படி சுயமரியாதை, ஆண்மை, சமத்துவம் இவைகள் உண்டாகுமென்பதை நன்றாய் யோசித்துப்பார்த்தால் விளங்காமல்போகாது. பார்ப்பனப் பிள்ளைகளுக்கு பார்ப்பன உபாத்தியாயர்களே வேண்டும் என்று பார்ப்பனர்கள் சொல்லுவார்களேயானால் அவர்களுக்கென்று இவ்வளவு பணம் என்பதாக ஒதுக்கிவைத்து அதை அவர்களிடமே ஒப்புவித்து அவர்கள் இஷ்டம்போல் தனியாக பார்ப்பனப் பிள்ளைகளுக்கு என்பதாக பள்ளிக்கூடம் வைத்து நடத்திக்கொள்ளுவதானாலும் அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. சுயமரியாதை இல்லாமல் செய்யும் மந்திரி உத்தியோகத்தைவிட சுயமரியாதையுடன் செய்யும் தோட்டி உத்தியோகமே பெரிதானது. ஆதலால் நமது பிள்ளைகள் மந்திரிஉத்தியோகப் படிப்புப்படிப்பதைவிட சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும்படியான படிப்பு படிப்பதுதான் தேசத்திற்கும் சமூகத்திற்கும் முற்போக்கைக் கொடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

## பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் உறையூர்.

நாளது தைத்திங்கள் 16ம் நாள் (29-1-27) சங்கத்தில் திருவாளர் சதாநந்தம் அவர்கள் தலைமையின் கீழ் அறநிலைய பாதுகாப்பு மசோதாவை அரசப்பிரதிநிதி அங்கீகரித்தமைக்கு வந்தனம்செலுத்துவதாகவும் அதை விரைவில் அமுலுக்குக்கொண்டுவர அதிகாரிகள் முயற்சி எடுக்கக் கேட்டுக்கொள்வதாகவும், திருவாளர் ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார் மாணவர்களை கல்லூரிக்கு தெரிந்து சேர்க்கும் சபையை எடுத்து விடவேண்டுமென்று சட்டசபையில் கொண்டுவந்திருக்கும் தீர்மானம்நம்மாணவர்களைப்பாதிப்பதால் அதைக் கண்டிப்பதோடு ஏனைய சட்டசபை பார்ப்பனரல்லாத உறுப்பினரும் ஆதரிக்கக்கூடாதெனக்கேட்டுக்கொள்வதாகவும், அச்சங்கத்தைவைத்து உபகரிக்குமாறு கல்வி மந்திரியைக்கேட்டுக்கொள்ளுவதாகவும், தஞ்சை ஜில்லா நாட்டாண்மைக்கழகத்தலைவராகதிருவாளர் ஏ. டி. பன்னீர் செல்வம் தேர்ந்தெடுக்கப் பெற்றமைக்கு களிபேருவகையடைவதாகவும், இச்சங்கப்புரவலருள் ஒருவராகிய திருவாளர் டி. பி. பிச்சை ரெத்தினம் பிள்ளையவர்களை திரிசிரபுரம் நகராண்மைக் கழக உறுப்பினராக நியமனம் செய்தமைக்கு மகிழ்ச்சியடைவதாகவும், அவருக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தி வாழ்த்துக்கூற வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக காரியதரிசி திருவாளர் தி. எஸ். நாகப்ப பிள்ளை அறிவிக்கிறார்.

## பரோடாவுக்கு தமிழ் நாட்டுப் பார்ப்பன மந்திரி.

நமது நாட்டுப் பண்டை அரசாங்கங்கள் ஒழுக்கவீனமாக நடந்ததற்கும் வேற்றரசர்களால் ஜயிக்கப்பட்டதற்கும் அன்னியநாட்டார்கள் ஆதிக்கம் பெற்றதற்கும் பார்ப்பன மந்திரித்துவம்தான் முக்கிய காரணமென்பது வர்ணபாரம்பரையாகவும் சரித்திர வாயிலாகவும் அனுபோக பூர்த்தியாகவும் நாம் அறிந்தவிஷயம்.

திருவாங்கூர் ராஜ்யம் சென்ற 100-வருஷ காலத்திற்கு 22 மந்திரிகளில் 93-வருஷ காலம் 20 மந்திரிகள் பார்ப்பன மந்திரிகளாகவே இருந்து தர்மந்திரித்துவ ஆதிக்கம் செலுத்தி வந்ததின் பலனும் இப்போது அந்த ராஜ்யத்தில் 100-க்கு 50 பங்கு ஜனங்கள் அன்னிய மதஸ்தர்களாவதற்கு இடம்கொடுத்து வந்திருக்கிறது. 40 லட்சம் ஜனத்தொகையில் 20 லட்சம் ஜனங்கள் அன்னிய மதஸ்தர்கள். எந்த பார்ப்பன மந்திரியாவது இதைப்பற்றி கவனித்தவரே அல்லர். அன்றியும் நமது மக்களைப் பறிகொடுத்து பாதிரிமார்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து வெள்ளைக்காரவர்களது சிபார்சுபிடித்து பெரியபட்டங்களும் உத்தியோகங்களும் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறார்களே அல்லாமல் கொஞ்சமாவது மதாபிமானத்துடன் அதிகாரம் செலுத்தவேயில்லை. கொச்சியிலும் இதுபோலவேதான், அதுபோலவே 100-க்கணக்கான வருஷங்களாய் பார்ப்பனர்களே மந்திரியாய் இருந்துவந்த-வரும் புதுகோட்டை அரசாங்கத்தை இன்னதுதான் செய்திருக்கிறார்கள் என்று சொல்லவே முடியாது. அது இப்போது இருக்கும் யோக்கியதையைப் பார்த்தாலே தெரியவரும். ஐதராபாத், மைசூர் அரசாங்கங்களும் பார்ப்பன மந்திரித்துவத்தின் பலனும் நாளுக்கு நாள் அதன் விஸ்தீரணங்கள் குறைந்துவந்திருப்பதும் வெள்ளைக்காரருக்கு உளவு சொல்லிக்கொடுத்து அந்நாடுகளை ஒழிக்கப் பாடுபட்டுவந்ததும், இன்னமும் வெளி அரசாங்கங்களும் அதாவது இப்போது பட்டத்திலிருந்து விலகிய இந்தூர் அரசர் பட்டத்திலிருந்து விலகுவதற்கு காரணமாயிருந்த சம்பவம் நடந்த காலத்திலும் பார்ப்பன மந்திரித்துவமும் ஆதிக்கமும் இருக்கும்போதுதான் அவ்வரசனுக்கு இந்த கதி ஏற்பட்டது. இனியும் இந்த தேசத்தில் இப்போது பிரத்தியக்ஷத்தில் கெட்டுப்போன அரசுகளும், ஜமீன்களும், பாளையப்பட்டுகளும் ஆகியவைகளில் எதை எடுத்துக்கொண்டாலும் பார்ப்பன ஆதிக்கம் இல்லாததாக ஒன்றுகூட கிடைப்பது கஷ்டமாகத்தானிருக்கும். இவற்றை உணர்ந்தே பெரியவர்கள் "ஆறு கெட நாணலிடு, ஊரு கெட நூலை(பூணூலை)விடு" என்று சொல்லியிருப்பதும் அவ்வைப்பிராட்டியாரும் ஒரு அரசன் மந்திரி வேலைக்குத் தகுந்தவர்கள் யார் என்று கேட்டபோது 'நூலாலே(பூணூலாலே) காடு கெடும்' என்று சொன்னதோடு, வேளாளர்கள் மந்திரியுமாவார்கள் வழித் துணையுமாவார்கள் என்று ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் இதற்கு எத்தனையோ உதாரணங்களும் ஆதாரங்களுமிருக்கின்றன. இப்படி இருக்க இப்போது பரோடாசமஸ்தானத்திற்கும் ஒரு பார்ப்பனரையே திவானாக நியமித்திருப்பதாக தெரியவருகிறது. இந்தப்பார்ப்பனர் திவானாகப்போய் அந்நாட்டின் லக்ஷியத்தை கவனியாமல் வெள்ளைக்காரருக்கு அனுகூலம் செய்வதன் மூலம் அவர்களது திருப்திபெற்று திவான்பகதூர் K.C.I.சர் முதலிய பட்டங்கள் பெற்று நிர்வாகசபை மெம்பராகி அவர்கள் வீட்டுநாய்க்குட்டிகள் முதல் கொண்டு டிப்டி கலெக்டர், முன்சீப், ஜட்ஜி, கலெக்டர், சூபரெண்டு முதலிய உத்தியோகங்கள் பெற்று நம் தலையில் கை வைக்கப் போகிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதாரை அனுப்புவதென்றாலே வெள்ளைக்காரருக்கு பயம். பார்ப்பனரிடம் இருக்கும் நம்பிக்கை அவர்களுக்கு மற்றவர்களிடம் இருப்பதில்லை இவர்களும் ராஜ்யம் எப்படியோ போகட்டுமெனக்கருதி வெள்ளைக்காரருக்கு நல்ல பிள்ளையாய் நடப்பதுமில்லை; அதனால்தான் வெள்ளைக்காரர்கள் பார்ப்பனர்களையே பார்த்து சிபார்சு செய்து அனுப்புகிறார்கள்.

---

## நாகை பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் பொங்கல் வசூல்.

தலைவர்களின் கட்டளைப்படி பொங்கல் முதல் மூன்று தினம் வரையில் சங்க மெம்பர்கள், பஜனை கோஷ்டியுடன் உண்டியலெடுத்து வசூல் செய்தார்கள். 20-1-27 மாலை உண்டியல் திறக்கப்பட்டதில் ரூ. 71-9-8 இருந்தது. அந்த தொகை 1836 வீட்டில் வசூலிக்கப்பட்டதாகும்.

விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு ரூபாய்கள் | 19க்கு | ரூ. | 19-0-0 |
| அரை ரூபாய்கள் | 7 ,, | ,, | 3-8-0 |
| கால் ,, | 22 ,, | ,, | 5-8-0 |
| அரைக்கால் ,, | 72 ,, | ,, | 9-0-0 |
| ஒரு அணாக்கள் | 224 ,, | ,, | 14-0-0 |
| காலணாக்கள் | 1184 ,, | ,, | 18-8-0 |
| பைசாக்கள் | 308 ,, | ,, | 1-9-8 |
| | 1836 | | 71-9-8 |

இதன்றியில் பெண்மக்கள் வலிய கொண்டு வந்து போட்ட அரிசியையும் வாங்கிக்கொள்ளப்பட்டது. அதில் 25 படி சேர்ந்தது என காரியதரிசி அறிவிக்கிறார்

## சென்னைமாகாண கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் 7-வது மஹாநாடு

6—2—27 தேதியில் முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களால் திறக்கப்பட்டு, ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியாரவர்கள் பி. ஏ. பி. எல். எம். எல். ஸி. தலைமையின் கீழ் நடைபெறும்.

---

## ஆம்பூர்.

வைசிராய் பிரபு தேவஸ்தான மசோதாவை அங்கீகரித்தமைக்காக சந்தோஷம் தெரிவிப்பதற்கு ஆம்பூரில் நாளது மாதம் 7 தேதி ஒரு கூட்டம் நடைபெறும். ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்படும். ஸ்ரீமான் ஆரியா அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்களென ஒருநிருபர் அறிவிக்கிறார்.

## இன்னுமா நமக்கு சூத்திரப் பட்டம்?

நமது நாட்டில் ஆதியில் வருணாசிரம தர்மம் என்பது இல்லையென்றும், மக்கள் பிறவியில் உயர்வுதாழ்வு இல்லையென்றும் இப்போது வருணாசிரம தர்மம் என்பதன் மூலமாய் வருணாசிரம முறையில் மிகவும் தாழ்ந்த நிலைமையில் நாம் அழைக்கப்படுகிறோம் என்றும் அதாவது பார்ப்பனர்களால், சூத்திரர்கள் பஞ்சமர்கள், மிலேச்சர்கள் என்று கருதப் படுகிறதும் 100-க்கு 97 பேருக்கு மேலான எண்ணிக்கைகொண்ட நாம் இப்பெயரை வகிப்பது மிகவும் சுயமரியாதையற்றதென்றும், சூத்திரன் என்கிற பதம் பார்ப்பனர்களின் அடிமை, பார்ப்பனர்களின் வேசிமக்கள் என்னும் கருத்தையே கொண்டது என்றும் பஞ்சமன் என்கிற பதம் ஜீவவர்க்கத்தில் பூச்சி, புழு, பன்றி, நாய் கழுதை முதலியவைகளுக்கு இருக்கும் உரிமைகூட இல்லாததும் கண்களில் தென்படக்கூடாததும் தெருவில் நடக்கக்கூடாததுமான கொடுமைத்தத்துவத்தைக் கொண்டது என்றும், மிலேச்சர்கள் என்பது துலுக்கர், கிறிஸ்தவர், ஐரோப்பியர் முதலிய அன்னிய நாட்டுக்காரரை குறிப்பது என்றும், அவர்களைத் தொட்டால் தொட்ட பாகத்தை வெட்டி எறிந்து விடவேண்டிய கருத்தைக்கொண்டதென்று உண்டாக்கி அந்தப்படியே பார்ப்பனர்களால் ஆதாரங்களும் ஏற்படுத்திவைத்துக் கொள்ளப்பட்டு அதுதான் இந்துமதத்திற்கு ஆதாரமென்று காட்டப்படுகிறதென்றும் அநேக தடவைகளில் ஆதார பூர்வமாய் எடுத்துச்சொல்லி வந்திருக்கிறோம். அதற்காக எவ்வளவோ கிளர்ச்சிகளும் செய்துவந்திருக்கிறோம். இவ்வளவும் நடந்துவரும் இந்தக்காலத்தில் இன்னமும் முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலிய ஸ்தாபனங்கள், சூத்திரன், பஞ்சமன், பிராமணன் என்னும் பதங்களை உபயோகப் படுத்திவருகிறதென்றால் இதன் தலைவர்களுக்கு மானம், வெட்கம், சுயமரியாதை உணர்ச்சி சுத்தரத்த ஓட்டம் ஆகியவைகள் இருக்கிறதா என்று கேட்கிறோம். சமீபத்தில் மதுரையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் பொதுஜனங்களுக்கு ஏற்படுத்தப் பட்ட உணர்ச்சியே இதுதான். இப்படியிருக்க அம்மதுரைப் பட்டணத்திலே மங்கம்மாள் சத்திரங்களில் சூத்திரன் என்னும் வாசகங்கள் கொண்ட போர்டுகள் எழுதி தொங்கவிடப்பட்டிருக்கின்றன; இது எவ்வளவு அநியாயம்? ஆதலால் மதுரை ஜில்லா போர்டாரோ முனிசிபாலிட்டியாரோ உடனே இதை கவனித்து இவ்வித இழிமொழிகள் கொண்ட போர்டுகளையும் வாசகங்களையும் அப்புறப்படுத்தி இவ்வித வித்தியாசங்களையும் ஒழித்துவிடுவார்கள் என்றே நம்புகிறோம். இதுபோலவே இன்னும் மற்ற ஊர்களிலும இம்மாதிரி வாசகங்களோ சொற்களோ காணப்பட்டால் அதை உடனே அடியோடு நிவர்த்திக்கவேண்டியது உண்மையான மக்களின் முதல் கடமை என்பதாக தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## மதுரைக் கோவிலில் திரு. இராமநாதன்.

### பிராமணரல்லாதாரே பூஜை செய்தல்.

### அர்ச்சகர்களின் அநாவசியமான அமளி.

### பிராமணரல்லாத மக்களின் குதூகலம்.

மதுரை, பிப்ரவரி. 4—

நேற்றிரவு 8-மணி முதல் நடுராத்திரி 12-மணி வரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோயிலின் வாயிற் கதவுகள் எல்லாம் மூடப்பட்டு பலமான :போலீஸ் பந்தோபஸ்துகளும் வைக்கப்பட்டிருந்ததினால் நகரில் எங்கும் மிகுந்த பரபரப்பேற்பட்டிருந்தது. அந்நேரங்களில் வழக்கமாக நடக்க வேண்டிய பூஜைகளும் இதரகோயில் காரியங்களும் நடவாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஸ்ரீமான் ஜே. என். ராமநாதன் பிள்ளையார் கோயில் அர்த்தமண்டபத்திற்குள் சென்று கோயில் பட்டர்களுடைய (அர்ச்சகர்களுடைய) ஆட்சேபனைகளையும் கவனியாமல் கணேசருக்கு தாமாகவே தேங்காய் உடைத்து கர்ப்பூர ஹாரத்தி செய்ததாகவும், பிறகு அவர் தமது நண்பர்களுடன் ஸ்ரீ மீனாக்ஷி கோயிலுக்குச் சென்றதாகவும சொல்லப்பட்டது. அவர்கள் ஸ்ரீ மீனாக்ஷியம்மனின் கர்ப்பக் கிரஹத்திற்குள்ளும் நுழைவார்களென்று அஞ்சி பட்டர்கள் அதன் கதவுகளை மூடி விட்டார்கள். மேலும் ஸ்ரீமான் ராமநாதனும் அவரது நண்பர்களும் பிராமணரல்லாதார் வழக்கமாக நின்று தொழும் இடமாகிய அர்த்த மண்டபத்திற்கு வெளியே தேங்காய் உடைத்து கர்ப்பூர ஹாரத்தி எடுத்தார்கள். அவர்கள் கோயில் அர்ச்சகர்களின் ஆட்சேபனைகளைக் கவனிக்கவில்லை. இதனால் மிகுந்த பரபரப்பேற்பட்டது. வெளியிலுள்ள பெரிய கோபுர வாயிற்கதவுகளும் உள்பட எல்லாக் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. ஸ்ரீமான் ராமநாதன் உள்ளிட்ட உள்ளிருந்தவர்கள் இரவு 9–30 மணி வரைவெளியே வர முடியவில்லை. நிற்க வெளியிலிருந்தவர்கள் இரவு 12-மணிவரை உள்ளே செல்ல முடியவில்லை. போலீஸார் விசாரணை செய்தார்கள்

ஸ்ரீமான் ராமநாதன் வெளியே வந்த பொழுது வெளியே கூடியிருந்த பெரும் ஜனக் கூட்டத்தினர் அவரைக்கண்டு சந்தோஷ ஆரவாரம் செய்து அவருக்கு மாலை போட்டார்கள். அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். சுதேசி ஸ்டோருக்கு அருகில் இரவு 12-30 மணிக்கு நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் ராமநாதன் கோயிலுக்குள் நடந்த விஷயங்களை விளக்கி உபந்நியாசம் செய்தார். திராவிடன்.

### திருவண்ணாமலை.

கால நிலை. கதிரவன் தன் சொரூபத்தை காட்டுகிறான். வருணன் வாளாவிருக்கிறான். பயிர் தாய்முகம்காணாச்சேய்போல் வருந்துகின்றன. பரிகளோ துரிதமடைகின்றன. ஏழைகளுக்கு கடன் மேலிடுகிறது.

### திருவண்ணாமலை டவுன் கிளப்பு.

இக்கிளப்பு இவ்வூரில் ஏற்பட்டு அனேக பொது மக்களுக்கு பல பேருதவியை செய்வதுடன் பெரும் நேசத்தையும், அறிவையும் விளக்கி வருகிறது. இதன் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா இவ்வருடம் பிப்ரவரி மாதத்தில் நடத்தவேண்டும் என்பதாக நிர்வாக சபையாரால் தீர்மானமாகி அதற்கு வேண்டிய பெருமுயற்சிகளை காரியதரிசியாகிய திருவாளர் டி.எஸ் முத்துகுமாரசாமி முதலியாரும், திருவாளர் மிருகவைத்திய நிபுணர் விநாயக முதலியாரும் முன் வந்து நடத்திவருகிறார்கள் என்றுதெரிகிறது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

### ஆத்தூர் தாலூகா எத்தாப்பூர்.

சுமார் 4 மாதங்களுக்கு முன்னர் இவ்வூர் சிவன்கோவிலில் ஒரு கும்பாபிஷேகம் நடந்தது. இதற்காகப் பொதுஜனங்களிடம் வசூலித்த பணம் சுமார் ரூபாய் 4000 அக்கோவில் முக்கியஸ்தர்களான பார்ப்பனரிடம் கொடுக்கப்பட்டது; செலவும் செய்து விட்டார்கள். மாதம் நான்காகியும் இவர்கள் செலவு விபரத்தை வெளியிடவில்லை, சில பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் தனித்தனி கேட்டும் பதிலில்லை. பின்னர் இப்பார்ப்பனர்கள் இப்பணத்தை கையாடிவிட்டார்கள் என்பதாக இவர்களுக்கு சந்தேகமேற்பட்டு சில முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி அக்ரஹாரத்திற்குச்சென்று கும்பாபிஷேகக்கணக்கு வகைபாக்களைக் காட்டும்படி கேட்டனர். பார்ப்பனருள் ஒருவர் “கும்பாபிஷேகத்திற்கும் சூத்திரனுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது இதைப்பற்றிய பேச்சே பேசக்கூடாது” என ஆத்திரமுண்டாகும் படி கடுமையாகப் பேசிவிட்டார். இதன் பேரில் பார்ப்பனரல்லாதார்களுக்கு கோபம் ஏற்பட்டு அன்றுமுதல் பார்ப்பனர்களோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது எனத் தீர்மானித்து கடைகள் முதல் வண்ணான் நாவிதன்வரை ஒரே கட்டுப்பாடாக இருந்துவிட்டார்கள், பார்ப்பனர்கள் பார்ப்பன உத்தியோகஸ்தர்களுக்கு தாக்கல் கொடுக்க அவர்கள் வந்து பார்ப்பனரல்லாதாரை மிரட்டியதால் மிகுந்த பரபரப்பேற்பட்டிருந்தது. இந்நிலையில் சிலர் ஈரோட்டிற்கு வந்து ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீமான் நாயக்கர் எத்தாப்பூர் போய் அங்குள்ள பார்ப்பனரல்லாதாரின் கோபத்தைத் தணித்து கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்து அன்று மாலை மாரியம்மன் சாவடியில் ஒரு பெரிய கூட்டம் கூட்டி, சேலமிருந்து வந்திருந்த ஸ்ரீமான்கள் பவானிசிங், பூபதி, வையாபுரி பண்டாரம், சென்னகிருஷ்ண ஆழ்வார் முதலியபலரும் பேசி பார்ப்பனரல்லாதார் சங்கம் ஒன்று ஏற்படுத்திவிட்டு அன்று இரவே மோட்டாரில் சேலம்போய் அங்கிருந்து காலை மெயிலில் ஈரோடு போய் விட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### மற்றொரு கவுன்சிலரின் ராஜிநாமா.

ஈரோடு முனிசிபல் சேர்மனவர்களின் பொறுப்பற்ற நடக்கையாலும் நாணயக் குறைவாலும் சிலமாதங்களுக்கு முன்னர் 12 கவுன்சிலர்கள் ராஜிநாமாச் செய்துவிட்டமை வாசகர்களுணர்ந்த விஷயமாகும். 31-1-27 தேதி ஜனாப் அ. அசன் சாஹிபு அவர்களும் தாம் கவுன்சிலராக விருக்கமுடியாதென ராஜிநாமாச் செய்துவிட்டார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது.—“கவுன்சிலில் கட்சிப்பிரதி கட்சிகளிருக்கின்றன. ஆகையால் ஜனங்களுக்கு நன்மைசெய்ய முடியாது. சத்தியத்திற்கும் மனச்சாட்சிக்கும் விரோதமில்லாமல் நடந்து கொள்ளவு முடியாது” என்று கூறி இருக்கிறாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

### ஓமலூரில் புதுக்கட்டடத் திறப்புவிழா

ஸ்ரீமான் குப்புசாமிசெட்டியாரின் இலவச பிரைமரி பாடசாலைப் புதுக்கட்டடத்தை சேலம் ஜில்லா கல்வியிலாகாத் தலைவர் S. A. ஸ்டூல் B.A. அவர்கள் 7—2—27-ல் திங்கட்கிழமை திறந்து வைப்பார்கள் என்றுமானேஜர் டி. வி. குப்புசாமி செட்டியார் அறிவிக்கிறார்.

### காலண்டர் வரவு.

தங்கள் காலண்டர்களை எமக்கு அன்பு கூர்ந்தனுப்புவித்த அடியிற் குறிப்பிடப்பட்டிருக்கும் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

S கூடலிங்கம் பிள்ளை புத்தக வியாபாரம்
புதுமண்டபம் மதுரை,
A E முஹைபதீன் மெடிகல் ஹால்
வலங்கைமான தஞ்சை,
P S சுப்பிரமணிய ஐயர் “ஜனமித்திரன்”
காரிபாலபம் புதுக்கோட்டை,
தனலக்ஷ்மி விலாஸ் பிரிண்டிங் பிரஸ்,
திருப்பூர்,
கே. கோபால்சாமி நாயுடு & சன்,
கல் நகை வியாபாரம்,
செயிண்ட் தாமஸ் மவுண்ட் சென்னை.
கே. அப்தல்ரஹிமான் சாஹிபு & கோ,
ஜனரல் பேப்பர் வியாபாரிகள்
1 & 4 ஆண்டர்ஸன் வீதி சென்னை.
டீச்சர்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்,
சென்னை மாகாண ஆரம்பாசிரியர் சங்க
வாசக பாடப்பதிப்பாளர்,
200 தம்புசெட்டி வீதி ஜி டி சென்னை.
என். சங்கரப்ப செட்டியார்,
கதர் ஸ்டோர் திருப்பூர்.

பல வருணங்களில் பூவேலைப்பாடும் சுற்றுக்கோடும் அமைந்த பளபளப்பான கார்டு போர்டின் மத்தியில். தேதிக்கொரு சீட்டு வீதம் ஆண்டு முழுவதுக்கும் சேர்த்தமைக்கப்பெற்ற டாக்டர் மாடால் & கோவின் ஆபீஸ் காலண்டர் பார்வைக்கு மிகுந்த அழகாயிருக்கிறது.

Agents:—ndo-Germania & Co,
11—195, China Bazar Road,
Madras.

# ஸ்ரீமான் நாயக்கரின் தஞ்சை ஜில்லாச் சுற்றுப் பிரயாணம்.

## ஆங்காங்கு நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சாராம்சம்.

(முன்தொடர்ச்சி)

ஆச்சுயமரியாதை அடையவே இப்போது நாம் ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் சங்கம் என்பதாகவும், பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் என்பதாகவும் ஏற்பாடு செய்துவருகிறோம். வகுப்புப் பெயரால் ஏன் சங்கத்தை நிறுவவேண்டும்? என சிலர் கேட்கலாம். நமது நாட்டில் வகுப்புகள் இருந்துவருவதை யாவரும் மறைக்கமுடியாது. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் வகுப்புக்கு என சங்கங்கள் வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாருக்கும் பொதுக்குறைகள் பலவும் மற்ற வகுப்பார்களால் சிலகுறைகளும் இருந்துகொண்டுதான் வருகிறது. அவற்றை நிவர்த்தித்துக்கொள்ள அந்தந்த வகுப்பார் தனித்தனியாய் முயற்சித்துத்தான் ஆகவேண்டும். நமது குறையை மற்றொரு வகுப்பார் நிவர்த்திப்பார்கள் என்று எண்ணுவதற்கு போதிய நிலைமை இன்னமும் ஏற்படவில்லை. நமது குறையை மற்ற வகுப்பார் நிவர்த்திப்பார்கள் என்று எண்ணுவதற்குமுன் அந்த மற்ற வகுப்பாரால் நாம் கொடுமை செய்யப்படாமலும் குறைகளுண்டுபண்ணப்படாமலும் இருக்கிறோமா என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். நமக்கு இருப்பதாய் சொல்லிக்கொள்ளும் குறைகளில் பெரும்பகுதி மற்ற வகுப்பார்களாலேயே இருந்துவருகிறதேயல்லாமல் இயற்கையானதல்ல. ஆதலால் அக்குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள ஏற்படுத்தும் இயக்கங்கள் வகுப்புப் பெயர்களுடன்தான் ஏற்படுத்தப்படும். இதில் "ஏன் பார்ப்பனர்களை மாத்திரம் விலக்கவேண்டும்" என்பதாக சிலர் கேட்கக்கூடும். நாம் அவர்களை ஒருபோதும் விலக்கவேயில்லை; அவர்களால் நாம் விலக்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் தங்களை மாத்திரம் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு தனியாகப்பிரிந்து மற்றவர்களையெல்லாம் தாழ்ந்தவர்களென்று சொல்லி அநேக முறைகளில் சமத்துவம் அளிக்க மறுத்து நம்மை விலக்கி வைத்துக்கொண்டு வருகிறார்கள். நித்தியப்படி வாழ்வில் இதைப்பார்த்து வருகிறோம். ஆதலால் அக்குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டுமானால் அவர்களை நீக்கித்தான் நாம் சங்கம் ஸ்தாபிக்க முடியும். நமக்கு சமத்துவமளிக்க அவர்கள் சம்மதிப்பார்களேயானால் நமக்கென்று தனியாக பார்ப்பனர் நீங்கிய ஒரு சங்கம் தேவையில்லை. உடனே இவற்றை மூடியும் விடலாம். அவ்விதசமத்துவம் ஏற்படும்வரை இப்படி ஒன்று இருந்துதான் தீரும். அது பார்ப்பனருக்கும் நமக்கும் மாத்திரமல்ல; இன்னும் நம்மால் யாருக்காவது சமத்துவமளிக்க இடையூறு ஏற்படுமானால் அவர்களும் நம்மை நீக்கித்தான் சங்கம் ஸ்தாபித்துக்கொள்வார்கள். இவ்வித குறைகள் உள்ளவரை ஒருவரையொருவர் நீக்கி சங்கம் ஸ்தாபிப்பது நடந்துகொண்டுதான் இருக்கும். இதனாலேயே ஒரு வகுப்பாரிடம் ஒரு வகுப்பாருக்கு துவேஷம் என்று சொல்லிவிடமுடியாது. பஞ்சாப் அட்டூழியங்களைப்பற்றி மகாத்மா எடுத்துச்சொல்லி அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக அரசாங்கத்தாருடன் ஒத்துழையாமை செய்தது அரசாங்கத் துரோகமாகுமா? அல்லது வெள்ளைக்காரரிடம் துவேஷமாகுமா? ஒருபார்ப்பனர் ஒத்துழையாமையை அரசாங்கத்துரோகம் என்று சொல்லியும் கூட அரசாங்கத்தார் அதை ஒப்புக்கொள்ளாமல் பரிகாரம் தேடிக்கொள்ள நமக்கு உரிமை உண்டு என்று சொல்லிவிட்டார்கள். அப்படியிருக்க நமது சமத்வத்திற்காக அதுவும் நமது சுயமரியாதையைப்பாதிக்கும் வி[illegible] ஒழிப்பதற்காகச்செய்யும் பிரயத்தனங்கள் ஒருக்காலும் மற்றொரு வகுப்பாரிடம் துவேஷம் என்று சொல்லவே முடியாது. உதாரணமாக:-நமது வீட்டில் கொசுக்களின் உபத்திரவம் அதிகம் என்பதாக வைத்துக்கொள்ளுவோம். கொசுக்கடிக்கு பயந்துகொண்டு நாம் கொசுவலை போட்டுப் படுத்துக்கொண்டால் அது கொசுவுக்குத் துரோகம் செய்ததாகுமா? கொசுக்களெல்லாம் கூடிக்கொண்டு கொசுவாதம், கொசுத்வேஷம், என்று சத்தம்போட ஆரம்பித்தால் கொசுவுக்குப்பயந்துகொண்டு கொசுவலையை எடுத்தெறிந்துவிட்டு கொசுக்கள் நமது ரத்தத்தை உறிஞ்சி நமக்கு வியாதியை உண்டாக்கும் படி நாம் தடிக்கட்டையாய்ப் படுத்துக்கொள்ளுவதா? ஒருவர் தன் சொத்தைப் பாதுகாத்துக்கொள்ள நினைத்தால் அச்சொத்தைக்கொள்ளையடிக்க காத்திருப்பவனுக்கு கஷ்டமாகத்தான் தோன்றும். நமது வீட்டில் திருடலாம் என்று நினைத்திருப்பவனுக்கு நாம் கதவை தாழிட்டுக்கொண்டு பத்திரமாய்ப் படுத்திருப்பது துரோகமாய்க் கூட தோன்றலாம். ஒரு சமயம் இதனால் அத்திருடன் குடும்பம் பட்டினிகிடக்கவும் நேரிடலாம். அதற்காக நாம் பயந்துகொண்டோ, பரிதாபப்பட்டுக்கொண்டோ, கதவைத்திறந்து போட்டுக்கொண்டு படுத்துக்கொள்ள வேண்டுமா? கொஞ்சகாலத்திற்கு நாம் பந்தோபஸ்தாயிருந்தோமானால் திருடன் வந்து பார்த்துவிட்டு ஏமாற்றமடைந்து வீட்டுக்குப்போய் பட்டினிகிடப்பானானால் பிறகு தானாகவே இந்தத்தொழில் இனி நமக்கு பிரயோஜனப்படாது என்பதாகக்கருதி வேறு எதாவது ஒரு யோக்யமான தொழிலில் ஈடுபட்டு யோக்யமாகப் பிழைக்கக் கற்றுக்கொள்வான். ஆதலால் நாம் ஜாக்கிரதையாய் இருப்பதன் மூலம்நமது சொத்துப் பாதுகாக்கப்படுவதன் மூலம், திருடனும் யோக்யனாவதற்குமார்க்கம் ஏற்படுகிறது. ஆகையால் இம்மாதிரி சங்கங்கள் ஏற்படுத்துவதையோ, நமது சுயமரியாதையையும், சமத்துவத்தையும், வேறு ஒருவனுக்கு பறிகொடுக்காமல் காப்பாற்ற முயலுவதினாலேயோ, எந்த விதத்திலும் யாருக்கும் துரோகம் செய்தவர்களாகமாட்டோம். யாரிடமும் துவேஷமுள்ளவர்களுமாக மாட்டோம். மற்றொருவர் அப்படிச்சொல்லுவார்களே என்று நாம் பயப்படவேண்டியதில்லை. ஆதலால் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும், இவ்வித சங்கங்கள் ஏற்பட்டு மும்முரமாக வேலைசெய்ய வேண்டும். வாலிபர்களே பெரும்பாலும் இக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்கவேண்டும். சுயமரியாதையையும், சமத்வத்தையும் விட நமக்குவேறு பெரியகாரியம் வேண்டியதில்லை. சுயமரியாதையும், சமத்துவமும் அற்ற ஜனசமூகம் அரசியலைப்பற்றி பேசுவதென்றால் அது வெறும் மடமையும், புரட்டும், வயிற்றுப் பிழைப்புமல்லாமல் வேறல்ல. நமது வாலிபர்கள் அரசியல் என்னும் பெயரால் ஏமாந்துபோகிறார்கள். அரசியல் என்கிற தொத்து வியாதிக்கு பலியாகாமல் நமது வாலிபர்களைக்காப்பாற்ற வேண்டும். அரசியல் என்பது யோக்கியப்பொறுப்புள்ளதானால் மகாத்மா அரசியலை வெறுப்பாரா என்பதை யோசித்துப்பாருங்கள். மகாத்மாவுக்கு மிஞ்சின தேசபக்தி நமது அரசியல் புரட்டுக்காரர்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அரசியல் ஸ்தாபனம் என்னும் காங்கிரசை மகாத்மா கைப்பற்றிப்பார்த்துத்தான் அதில் உண்மையான அரசியல் வாதம் இல்லையென்பதும், புரட்டானதும், ஒருவரை ஒருவர் ஏமாற்றி தன்னலம் பெறுவதும் தன் வயிற்றுப்பிழைப்பானதுமான காரியமாயிருக்கிறதென்பதையும் உண்மையான அரசியல் விடுதலைக்கு ஒரு கூட்டத்தார் எதிரிகளாயிருக்கிறார்களென்பதையும் உணர்ந்து [illegible] விலக்கிக்கொண்டார். அப்படியிருக்க யாரோ சில கத்துக்குட்டிகள் சப்தம் போடுவதற்காக நாம் ஏமாந்துபோகக்கூடாது. நமது சுயமரியாதைக்கும் சமத்வத்திற்கும், காங்கிரசும் அரசியல் முறைகளும் எமன் என்பதை மறந்துவிடாதீர்கள். அதோடு மாத்திரமல்ல, தேசத்திற்கே பெரிய ஆபத்தான மார்க்கம் என்பதையும் மறந்துவிடாதீர்கள். உண்மையான அரசியல் விடுதலைக்கும், நமது சுயமரியாதைக்கும், சமத்வத்திற்கும், கண்டிப்பாய் இப்போதிய காங்கிரசில் வழியில்லை. மகாத்மாவின் நிர்மாணத்திட்டத்தை காங்கிரஸ்மூலம் நிறைவேற்றிக்கொள்ள பார்ப்பனர்களும், அரசியலில் வயிறு வளர்ப்பவர்களும், ஒருக்காலும் சம்மதிக்கவே மாட்டார்கள். கவனித்துப்பார்ப்பீர்களானால் மகாத்மாவின் நிர்மாணத்திட்டம் பார்ப்பனர்களுக்கு பெருத்த எதிரியாக இருக்கும். அதாவது தீண்டாமை ஒழிந்துவிட்டால் பார்ப்பனர்களுக்கு நமது நாட்டில் இடம் இருக்குமா என்பதை நன்றாய் யோசித்துப்பாருங்கள். பார்ப்பனர்களுக்கு இப்போது நமது நாட்டில் இருக்கும் யோக்கியதை எதனால்? அவர்கள் ஒழுக்கத்தாலா? நல்லறிவினாலா? கஷ்டப்படும் தன்மையினாலா? இவை ஒன்றிலும் அல்ல. நம்மைத்தாழ்ந்தவர்கள் என்றும், தீண்டாதவர்கள் என்றும் சொல்லிக்கொண்டிருப்பதும், தாங்கள் உயர்ந்த ஜாதியாரென்றும், மற்றவர்களுக்கு மோட்சம் கொடுக்க யோக்கியதையுள்ளவர்கள் என்றும் சொல்லிக்கொண்டிருக்கும்

புரட்டுகளிலேனும் தந்திரங்களிலேனுமல்லாமல் வேறென்ன? இந்த தர்மத்தை ஒழித்துவிட்டால் பார்ப்பனர் நமது நாட்டில் இப்போது இருப்பது போல் வாழ முடியுமா? ஆதலால் பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழியவும் சமத்துவத்திற்கும் கண்டிப்பாய் சம்மதிக்கமாட்டார்கள். மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொன்னவுடன் "பறையன் வீட்டிலும் சாப்பிடுவேன், நாயக்கர் வீட்டிலும் சாப்பிடுவேன்" என்று சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியே தான் தனது சிஷ்யகோஷ்டியுடன் ராஜினாமா கொடுத்துவிட்டு போய்விட்டார்கள் என்றால் மற்றவர்களைப்பற்றிச்சொல்ல வேண்டுமா? "காங்கிரஸ் தலைவர்" ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரே: தீண்டாமை அரசியலில் கலக்கக்கூடாது என்று சொல்லும்போது மற்ற பார்ப்பனர்கள் அரசியல் சபையில் தீண்டாமை ஒழிக்க உடந்தையாயிருப்பார்களா? தவிர மது விலக்கைப்பற்றியோ வென்றால் அதற்கும் நமது பார்ப்பனர்கள் சம்மதிக்கமுடியாது. நமது நாட்டில் மதுபானம் ஒழிக்கப்பட்டால் பெரும்பாலும் படித்த பார்ப்பனர்கள், தங்கள் வீட்டின் முன்புறம் தொங்கவிட்டுக்கொண்டிருக்கும் வக்கீல் போர்டு பலகைகளைத் திருப்பி காப்பி ஓட்டல் கடை போர்டுகளாக மாற்றிக்கொண்டும், பிச்சையும் தூது போகும்வழிகளில்தான் ஜீவிக்க வேண்டிவரும். சர்க்கார் உத்தியோகத்திலுள்ள பார்ப்பனர்களுக்கும் அநேகமாய் இதகதியேதான் வரும். ஆதலால் மதுவை ஒழிப்பதற்கு பார்ப்பனர்கள் மனதோடு கூட சம்மதிக்கமுடியாது. அப்படி மது விலக்குக்கு உண்மையாய் பாடுபடுபவர்களாயிருந்தால் கள் உற்பத்தியில் பணம் சம்பாதிக்கும் ஸ்ரீமான் சி. வி. வெங்கடரமணய்யங்காருக்கும் சாராயம் விற்ற விளம்பரம் செய்யும் ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்காருக்கும் ஓட்டு வாங்கிக்கொடுக்க ஸ்ரீமான் சி. ராஜகோபாலாசாரியார் பிரசாரம் செய்வாரா? கள்ளை நிறுத்தப்பாடுபடுவதாய் பறை அடித்துக்கொண்டும் மகாத்மாவிடம் நற்சாட்சி பத்திரம் வாங்கிவைத்துக்கொண்டுமிருக்கும் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரின் மதுவிலக்கு பிரசாரமே இப்படியிருக்குமானால் மற்றபார்ப்பனர்களின் மதுவிலக்கு பிரசாரம் உண்மையாயிருக்குமா? கதர் விஷயமும் பார்ப்பனர் கவலை கொள்ள இடமேயில்லை. நாட்டில் தரித்திரத்தால் கஷ்டப்பட்டு பட்டினிகிடந்து சாவது பார்ப்பனரல்லாதாரே தவிர பார்ப்பனர்கள் ஒருவராவது பட்டினி கிடக்கிறார் என்று சொல்லவேமுடியாது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் யோக்கியதைக்குமேல் வாழுவதோடு மற்றவன் பட்டினிகிடந்துகொண்டாலும் தனக்கு கொடுத்துவிடவேண்டும் என்பதாக பலவழிகளிலும் மார்க்கத்தைத் தேடிவைத்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள்பெண்கள் எந்தவகையிலும் குறைவில்லாமல் இருக்கும்படியான நிலைமை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முனிசிபு கோர்ட்டில் பியூனாகவோ சம்மன் சர்வ் செய்பவனாகவோ இருந்தாலுங்கூட அவன் மகள் ஆர்மோனியம் வாசிக்கும்படியான செல்வாக்கு பெற்றிருக்கிறான். இப்படிக்கு அல்லாம் இல்லாவிட்டாலும் பிச்சை எடுப்பதையும் குலத் தொழிலாகக் கொண்டிருப்பதாலும் அவனுக்கு கொடுப்பதே நமக்கு புண்ணியம் என்று கற்பித்துவைத்திருப்பதாலும் எவ்வழியிலும் அவர்களுக்கு பட்டினிக்கு மார்க்கமில்லை. ஆதலால் பட்டினி கிடப்பவர்கள் பார்ப்பனரல்லாதாரே தவிர வேறில்லை. பார்ப்பனரல்லாதார் பட்டினி கிடக்காமல் சுகமாய் வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டால் பார்ப்பனருக்கு அந்த கஷ்டமாகக்கூடத்தான் இருக்கும். ஏனெனில் பார்ப்பனர்களுக்கு வேலைசெய்யச் சூத்திரன் அகப்படமாட்டான் என்கிறகவலைவந்து படலாம். ஆகவே நிர்மாணத் திட்டம் காங்கிரஸ் மூலமாய் நிறைவேற கண்டிப்பாய் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இம்முறை காஞ்சீ வருஷம் சந்தேகமற அனுபவத்தில் கண்டபிறகே பார்ப்பனரல்லாதார்களைக் கொண்டேதான் நிர்மாணத்திட்டம் நிறைவேற்ற முடியும் என்கிற முடிவின்மேல் பார்ப்பனரல்லாதார் சங்கத்தைப்பிடித்திருக்கிறேன். இந்நிர்மாணத் திட்டத்தில் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை, சமத்துவம் விடுதலை, உண்மையான சுயராஜ்யம் ஆகிய எல்லாம் அடங்கிக்கிடக்கிறது. இதை நிறைவேற்றச் செய்வதற்குத்தான் ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் சங்கமும் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கமும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கமும் ஆகியவைகள் ஏற்படுத்தப்படுவதே அல்லாமல் சில பார்ப்பனர்களும் வயிற்றுச்சோற்று தேசபக்தர்களும் அரசியல் பெயரைச் சொல்லாமல் வாழ யோக்கியதை இல்லாதவர்களும் சொல்லிக்கொண்டு திரிவதுபோன்ற உத்தியோக ஆசை பிடித்தோ குலாம் தனத்தில் ஆசை கொண்டோ சுயநல வாழ்க்கை நடத்தவோ அல்ல என்பதைக் கண்டிப்பாய் சொல்லுகிறேன். தவிரவும் உத்தியோக ஆசை யாருக்காவது இருக்குமானாலும் அரசியலின் மூலம் பிழைக்கவேண்டுமானாலும் அவர்கள் தாராளமாய் காங்கிரசிக்கு போங்கள் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு நல்லபிள்ளைகளாகி அவர்கள்வாலைப்பிடித்துத்திரியுங்கள்! ஏதோ அவர்கள் தின்று மீதியான எச்சிலை உங்களுக்கும் கொடுப்பார்கள், சில சமயத்தில் அவர்களுக்கு எட்டாததை உங்களுக்கு காட்டுவார்கள், ஆதலால் அந்த எண்ணத்தோடு இச்சங்கத்தில் யாரும் சேராதீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும் இச்சங்கத்தில் உள்ள வாலிபர்கள் எல்லாவற்றிற்கும் துணிந்தவர்களாகத்தானிருக்கவேண்டும், சத்தியாக்கிரகமோ சட்டமறுப்போ அடக்கு முறையோ ஏற்பட்டால் மார்பைக் கொடுக்கக்கூடியவர்களாகவே இருக்கவேண்டும். இக்காரியங்களுக்கு பெரியோர்கள் என்பவர்களை எதிர்பார்ப்பது வீணான காரியம் என்பது எனக்குத் தெரியும். ஆதலால தான் வாலிபர்களாகிய உங்களைக் கோட்டுக்கொள்ளுகிறேன், பட்டாளம், பீரங்கி, துப்பாக்கி, ஆகாசக்கப்பல் வெடிகுண்டு இவைகளைக்கொண்ட சர்க்காரையே லட்சியம செய்யாமல் நமது மனச்சாக்ஷியையே மதித்து நடந்த நாம் நமதுசுயமரியாதைக்காக நமது மனச்சாக்ஷியை மதித்து நடப்பது முடியாத காரியமல்ல, ஆகையால் நமது வாலிபர் சங்கம் எப்போதும் தயாராயிருக்கவேண்டும். அழகுக்கும் பெருமைக்கும் சுயநலத்திற்கும் ஏற்பட்ட சங்கமல்லவென்பதையும், உயிரைக் கொடுத்தாகிலும் சுயமரியாதையை அடையத்தக்க சங்கமென்பதையும் நன்றாய் உங்கள் மனதிலிருத்துங்கள். அப்படிப்பட்டவர்களே வாருங்கள்! நீங்கள் கொஞ்சமாக இருந்தாலும் நமக்கு கவலையில்லை. பெரிய சீர்திருத்தங்களோ கிளர்ச்சிகளோ ஏற்படுகிற காலத்தில் தைரியவான்களும் பொறுமையும் தியாக குணமும் உள்ளவர்களுமே நமக்கு வேண்டும். குடும்ப கவலை உள்ளவர்கள் இதில் அதிகமாய் கலந்துகொள்ளாதீர்கள். உங்கள் உண்மையான முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் ஆண்மையையும் திடத்தையும் குடும்பக் கவலைகளே கெடுத்துவிடுகின்றன. சுதந்தர மனிதன் குடும்ப வாழ்க்கையில் பிரவேசித்தவுடன் குடும்பத்தைக் காப்பாற்றவே பிறந்ததாகவும் அதற்காகவே வாழவேண்டியவனாகவும் ஏற்பட்டு சுயமரியாதை, ஆண்மை, மனச்சாக்ஷி எல்லாவற்றையும் இழந்துவிடுகிறான். அநேகமாகவே குடும்பி என்று சொல்வதற்கே, ஆண்மை, சுயமரியாதை, மானம, மனச்சாக்ஷி அற்றவன் என்பதுதான் தத்துவார்த்தம். ஆதலால் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாத வாலிபர்கள் நமது சுயமரியாதைக்கு மிகுதியும் வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் முதலில் ஒழுக்கத்தையே பயிலவேண்டும்; பிறகு தன்னலத்தை மறக்கவேண்டும்; சேவைக்காக இருப்பதாய்க் கருதவேண்டும் இப்படிப்பட்ட இளைஞர்கள் தான் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு கலங்கரை விளக்கங் (லைட் அவுஸ்)களாவார்கள். இப்படிப்பட்ட உண்மையான வாலிபர்களைக் கொண்ட சமூகம் ஒரு வினாடியாவது சுயமரியாதையும் சமத்துவமும சுதந்திரமுமடையாமல் இருக்கமுடியாது.

ஆதலால் வாலிபர்களே! உங்களையே பெரிதும் நம்பி இருப்பதால் நீங்கள் முன்வரவேண்டும். பெரியோர்களா யிருப்பவர்களும பல காரணங்களால் தாங்கள் முன்வர யோக்கியதை யற்றவர்களா யிருந்தாலும் வாலிபர்களையாவது தடுக்காமல் இருக்க வேண்டுகிறேன் என்றும் பேசியதோடு மற்றும் கதர் அணியவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும மதச்சடங்கு கோவில் முதலிய காரியங்களில் பார்ப்பனரைக்கொண்டுதான் நடத்தவேண்டும் என்கிற மூட நம்பிக்கையை ஒழிக்கவேண்டுமென்பதுபற்றியும் விஸ்தாரமாக பேசினார்.

---

## பார்ப்பனீய மொழித்த திருமணம்.

தை மாதம் 24-ந் தேதியில் (6-2-27) சென்னை பெத்துநாயக்கன்பேட்டையில் மயிலை திரு. சிவானந்த முதலியார் புதல்வன் சிரஞ்சீவி முத்துக்குமாரசாமிக்கும், புழலை தணிகாசல முதலியார் புதல்வி ஸ்ரீமதி ருக்குமணிக்கும் திருமுல்லைவாயில் ஒதுவாரைக் கொண்டு திருமணம் நிகழ்த்தப்பெற்றமென மயிலை ஸ்ரீமான் ஆறுமுக முதலியார் அறிவிக்கிறார்-

## நன்றிகெட்ட தன்மை.

சென்னையில் வர்த்தகர்கள் சங்கம் வியாபாரச் சங்கம் என்பதாக இரண்டொரு சங்கங்கள் இருந்து வந்தாலும் அவைகள் முழுவதும் ஐரோப்பியர்கள் ஆதிக்கமாகவே இருந்து வருவதோடு இந்திய வியாபாரிகளுக்கு அவற்றில் போதிய செல்வாக்கும்சுதந்திரமும் இல்லை என்பதாகக்கண்டு காலஞ்சென்ற பெரியார் சர். பி. தியாகராய செட்டியார் அவர்கள் பெருமுயற்சிசெய்து தென் இந்திய வர்த்தக சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அது நிலைத்திருப்பதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்துகொடுத்து அதன் மூலம் ஐரோப்பிய சங்கங்களுக்கு இருப்பது போலவே சென்னை முனிசிபாலிடிக்கும், சென்னை சட்ட சபைக்கும் இந்திய சட்டசபைக்கும் அங்கத்தினர்களை தெரிந்தெடுக்கும் உரிமைகள் முதலிய பெருமைகளையும் வாங்கிக்கொடுத்து அதற்கு ஒரு யோக்கியதையையும் உண்டாக்குவதற்கு எவ்வளவோ கஷ்டமும் பட்டார். இப்போதும் மற்ற எல்லா ஸ்தாபனங்களையும் நமது பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்காக சூழ்ச்சிகளாலும், தந்திரங்களாலும் சுவாதீனப்படுத்திக்கொண்டது போலவே இதையும் கைப்பற்றிக்கொண்டு இருப்பதோடு அச்சங்கத்திற்கு இவ்வளவு பெருமையும், யோக்கியதையும் சம்பாதித்துக்கொடுத்த சர் தியாகராயரின் வார்சான ஸ்ரீமான் பி.டி. குமாரசாமி செட்டியார் அவர்களையே அச்சங்கத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இக்கூட்டத்தாரின் கன்னெஞ்சத்தையும் நன்றிகெட்ட தன்மையையும் காட்ட இதைவிட வேறு ஏதாவது உதாரணம் வேண்டுமா? ஆகவே நமது பொது நன்மைக்காக என்று எந்தஸ்தாபனங்களை ஏற்படுத்தினாலும் மெள்ள மெள்ள அதில் வேலைக்காரராக வந்து சேர்ந்து குமாஸ்தாவாகி, மேனேஜராகி, எஜமான்களாகி நம்மை கூலிக்காரர்களாக செய்து விடுகிறார்கள். இக்காரணங்களால் தான் நாம் செய்யும் தியாகமோ, உழைக்கும் உழைப்போ ஏற்படுத்தும் ஸ்தாபனங்களோ, நமக்கே பலன் தர வேண்டுமானால் கண்டிப்பாய் அவற்றில் பார்ப்பனர்களைச் சேர்க்கக்கூடாது என்று வாதாடி வருகிறோம் அல்லாமல் மற்றபடி அவ்வகுப்பார் மீது துவேஷம் கொண்டல்ல இந்த விஷயத்தை அறியாமல் இருப்பவர்களும், பார்ப்பனர்களிடம் கூலி வாங்கிப் பிழைப்பவர்களும், பார்ப்பனர் விரோதம் கொண்டால் வாழ முடியாதவர்களும், தங்களை பெரிய தேசபக்தர்கள் போல காட்டிக்கொண்டு, உபதேசம் செய்ய வந்து விடுகிறார்கள். ஆனபோதிலும் பொது ஜனங்கள் இதை ஏதோ அறியாமையாலும், வயிற்றுக் கொடுமையாலும், இப்படி உளறுகிறார்கள் என்பதாக மதித்து கூடியவரையில் பார்ப்பன சம்பந்தமில்லாமலே முற்போக்கான வழியே நடவேண்டுமென்றும், அதற்கேற்ப ஸ்தாபனங்களையும், ஏற்படுத்த வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

## காங்கிரசில் தீண்டாமைவிலக்கு நிதி

தீண்டாமை விலக்கு என்பது ஒத்துழையாமை தத்துவத்தில் பட்ட நிர்மாணத்திட்டங்களுள் உச்ச ஸ்தானம் பெற்றிருந்தது. அதற்காக எவ்வளவோ பணங்களும் ஒதுக்கி வைத்து அத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஆனால் அவைகள் என்னகதி அடைந்தன என்பதை கவனிப்போம். தீண்டாமைவிலக்கு நிதிக்காக தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியார் ரூ20000 ஒதுக்கிவைத்து இருந்தார்கள். அந்தப் பணத்தை தமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டி அந்த வேலைக்கு உபயோகப்படுத்த ஸ்ரீமான் சி. இராஜகோபாலாசாரியார் ஒரு சிறிதும் இடம் கொடுக்காமல் தனது வசம் அந்த ரூபாயை ஒப்புவித்து விடும் படிக்கும் தான் அந்த வேலை செய்து கொள்வதாகவும் சொல்லிப் பணத்தை எடுத்து தன் பெயருக்கு பாங்கியில் போட்டுக்கொண்டார். கமிட்டியில் இருந்து தான் விலகும் வரையிலும் அந்தப்பணத்தை தான் சும்மா வைத்துக்கொண்டிருந்துவிட்டு கடைசியாக அதை சீனிவாசய்யங்காருக்கு தேர்தல் செலவுக்கு ஏற்பட கமிட்டி வசம் அதை ஒப்புவித்தார். அவரும் தனக்குபூரா அதிகாரம் வரும் வரை தீண்டாமையைப் பற்றி பேசாமலே இருந்து தான் முழு அதிகாரத்திற்கு வந்தவுடன் கொஞ்ச கஞ்சம் செலவு செய்தது போக மீதி பெரும் பாகம் பணத்தை தேர்தல் வேலைக்கு எடுத்து தாராளமாய் செலவு செய்து கொண்டும், தன் பேச்சைக் கேட்கிற ஆதித்திராவிடர்களுக்கு மாதம் ரூ. 20, 30 கொடுத்து அவர்களைக்கொண்டே தீண்டாமைவிலக்குக்கு விரோதமாய் பிரசாரம் செய்யவும் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார். கடைசியாக தீண்டாமை விலக்கு காங்கிரசில் இருப்பது சரியில்லை கதரைப் போலவே அதுவேறு ஸ்தாபனமாக இருக்கவேண்டும் என்றும் அக்கிராசனப்பிரசங்கத்தில் சொல்லிவிட்டார். இப்போது தீண்டாமை விலக்குநிதி அய்யங்கார்களும், ஆச்சாரிகளும், அய்யன்மார்களும் நல்லவர்களாவதற்கும், சட்ட சபை மெம்பர், முனிசிபல் கவுன்சிலர்கள் ஆகி தீண்டாமை நிலை நிறுத்தவும் நமதுமனம்பதறப்பதற தாராளமாய் உபயோகப்படுத்தப்பட்டாய்விட்டது.

### திருப்புலிவனம்.
### செங்கற்பட்டு ஜில்லா
### பஞ்ச நிலைமை

உத்திரமேரூர் டிவிஷன் திருப்புலிவனம் கிராமத்தில் சுமார் 10 வருஷ காலமாக சாவியும் பஞ்சமுமாக நேர்ந்திருப்பதுந்தவிர, இவ்வருடமும் மழைக்குறைவினாலும், கவர்ன்மெண்டார் சரியானஜலவசதி செய்யாமையாலும் நேர்ந்த கொடுமையை கண்ணுறும் போதும், கேட்கும்போதும் எத்தகையினருக்கும் மனம் பதைக்காமல் இராது. நேரில்பார்த்தவர்களுக்கே உண்மை விளங்கும்.

மேற்படி திருப்புலிவனம் உத்திரமேரூர் இந்த ஏரிகளுக்கு ஜலம் சப்ளை செய்வதற்கு செய்யாறு தகுதியாயிருந்தும் கவர்ன்மெண்டார் மேற்படி ஆற்றில் கல் அணை கட்டி ஏரிகளைத் தகுதியுடையதாகச்செய்யவில்லை. மேற்படி கிராம மிராசுதார்களே உபயோகமற்ற மண் அணைக்கு வருஷாவரியில் சுமார் 2000 ரூபாய் செலவு செய்து, மேற்படி ஆற்றில் கட்டினார்கள். அது வெள்ளப்பெருக்கினால் உடனேஎடுத்துக்கொள்ளுகிறது. மறுபடியும் புதிதாய் ஜலம் வற்றிய பிறகு கட்டுகிறார்கள். இதனால் யாதொரு பிரயோஜனமும் அடைவதில்லை. ஏரிக்கரையை மராமத்து செய்து சுமார் 50வருடங்களுக்குமேல் ஆகிறது. இதன் கலிங்கல்களும் கரையும் உபயோகமற்றது. மேற்படி செய்யாற்றில் கவர்ன்மெண்டார் கல் அணை கட்டும் பட்சத்தில் ஷை ஏரிசாளால் பாயும்படியான நிலங்கள் சரியானபலனைக் கொடுத்து குடிகள் முன்னுக்கு வருவதுந்தவிர, சர்க்காருக்கு நஷ்டமில்லாமல் வருஷவாரியில் சுமார் 70000ரூபாய் கிடைக்கும். அனேக குடிகள் பிழைக்கமுடியாமல் வெளிதேசங்களுக்குப்போய்விடுகிறார்கள், அனேக நிலங்கள் பஞ்சாரகவும் தரிசாகவும் கிடக்கிறது. இந்தஜில்லாவில் கல்லணையே கிடையாது. இக்குறைகளை ஜில்லாகலெக்டர் துரையவர்கள் 19-1-27 தேதியில் நேரில் வந்து பார்த்தும் இருக்கிறார். ஷை விஷயங்களை சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களுக்கு அறிவித்து ஷை கல்லணையையும் ஏரியையும் கட்டத்தக்க ஏற்பாடு செய்வதுந் தவிர கிராம மிராசுதார்களும் மகஜர் மூலமாய் அறிவித்துக்கொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது என்றுஒரு நிருபர் எழுதுகிறார்.

### அறந்தாங்கி

திருப்பத்தூரிலிருந்து இவ்வூருக்கு வந்திருக்கும் சாமிநாத பிள்ளை என்பவர் தன் சமுசாரத்தின் பதினாறும் நாள் கருமக்கிரியைக்கு புரோகித பிராமணன் அன்னியில் (சைவ குருக்கள்) பண்டாரத்தைக்கொண்டு முடித்து இத்தாலூகாவில் இவ்வுத்தம கைங்கரியத்தில் முதன்மைபெற்றார். மேலும் 29—I—27 சில பிராமணரின் தூண்டுதல் மேல் ஜாதி இந்துக்கள் சிலர் மருத்துவகுல சகோதரர் பேரில் கொட்டகையில் நெருப்பிட்டாரென ஒரு பொய்க் கேசு கொண்டு வந்தார்கள். தன்னுடன் சில ஜாதி இந்துக்கள் சேர்ந்து கொண்டதினாலும், இரக்கமுள்ள போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் உண்மையைக்கண்டறியும் சக்தியினாலும் கேசு பொய்யென உடனே தள்ளிவிட்டார். மருத்துவசகோதரர் அப்படி கேசு கொடுத்து தன்னை இம்சித்தவர்கள் மீது பிராது கொடுத்திருக்கிறாரென ஒருநிருபர் அறிவிக்கிறார்.

### புதியபாலத் திறப்புவிழா.

நாளது-மீ 4-உ. வெள்ளிக்கிழமை கொங்கர்பாளையத்தில் கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டு ராவ் பஹதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் புதிய பாலத்தைத் திறந்து வைப்பார்கள் என ஸ்ரீமான் கே. என். நஞ்சப்ப கவுண்டர் அறிவிக்கிறார்.

## திருவண்ணாமலை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத் திறப்புவிழா.

### பொங்கல் உண்டி வசூல்.

இந்நகரில் மதுரை மஹாநாட்டின் தீர்மானப்படி தாலூகா கல்வைச் சங்கம் ஆரம்பிக்கவேண்டி, சேர்மென் ஸ்ரீமான் முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் பெருமுயற்சியால் 15-1-27உ பொங்கல் உண்டி வசூல் செய்யப்பட்டது. நாளது மாதம் 6-ந் தேதி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் தலைமையில் ஆரம்பவிழா நடத்தப்படும். மதுரை மஹாநாட்டின் தீர்மானங்களை ஆதரித்து அமுலுக்குக் கொண்டுவாலுர், எல்லோரும் கதரை அணியவேண்டி. அதை வியாபார முறையில் அபிவிருத்தி செய்தலும் முக்கிய நோக்கமாகும்.

### பொங்கல் உண்டி வசூல் விவரம்.

**100-ரூ. கொடுத்தவர்.**

ஸ்ரீமான் வீரப்ப செட்டியாரவர்கள்

**50-ரூ. கொடுத்தவர்.**

" வேட்டாயம் ஜமீன்தார்

**15-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான்கள் T. S. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் M. சண்முக முதலியாரவர்கள் தி. அப்பாய் நாயுடுகாரவர்கள்

**10-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான்கள் பா. சு. மு. அண்டு பிரதர்ஸ் மூடியனூர் ஆதிமூல உடையார், அ. அப்துல் ரஜாக் சாயபு அவர்கள், கிரிதாரி தாஸ் உதாரி தாஸ் வி. வே. சுப்பிரமணிய பிள்ளை, வெ. கி. முருகப்ப உடையார், தி. பெ. அய்யப்ப கவுண்டர், K. N. முராத் சாயபு, ராமசாமி பிள்ளை, வி. சுப்பராய செட்டியார்,

**7-ரூ. கொடுத்தவர்கள்.**

யா. ஸ. மு. & பிரதர்ஸ் பிராஞ்ச் ா. அருணாசல முதலியார்

**5-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான்கள் காதர் உசேன் சாயபு. அ. ஆறுமுக முதலியார், H. P. பச்சியப்ப பிள்ளை, R. ஸ்ரீனிவாச முதலியார், B. சின்னசாமி முதலியார், P. பச்சியப்பபிள்ளை, பொ. வைத்தியலிங்கம் முதலியார், K. பொட்டைய முதலியார், R. அருணகிரி முதலியார், A. மன்னப்ப பிள்ளை, அ. சு. பொன்னுசாமி செட்டியார், K. கோபால்சாமி முதலியார், M. B. ரங்கசாமி செட்டியார், ச. க. மாணிக்க முதலியார், சாத்தனூர் அப்பாய் முதலியார், F. T. S. உஸ்மான் சாயபு, K. துரைசாமி அய்யர் மு. சின்னத்தம்பி முதலியார், நாச்சிப்பட் K. பட்டுசாமிக் கவுண்டர், கோபாலகிருஷ்ண செட்டியார்.

**3-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான்கள் மு. வேணுகோபால நாயுடுகார், முத்துக்கருப்பஞ் செட்டியார், ச. சோணாசலம் பிள்ளை, S. ராஜபாத முதலியார், R. முத்துசாமி நயனார், அ. தா. பஞ்சாக்ஷரம் செட்டியார்,

**2-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான் சி. வெ. குப்புசாமி பிள்ளை, மு. குப்புசாமி பிள்ளை, கத்திப்இஸ்மால் சாயபு, ச. கந்தசாமி பிள்ளை, அ. அப்துல்அஜீஸ் சாயபு, வடிவேல் பிள்ளை, வே. மு. சாமிசெட்டியார், R. சடையப்ப செட்டியார், மு. சா. கிருஷ்ணசாமி முதலியார், சோ. சாமிநாத செட்டியார், அ. செம்பாத்தைய பிள்ளை, பொ. அய்யாக்கண்ணு செட்டியார், பாலசுப்பிரமணிய நயனார், அ. அப்துல்காதர் சாயபு, அ. மாணிக்க முதலியார், சு. ஆறுமுகம் பிள்ளை, ப. வெ. வெங்கிட்டராம செட்டியார், ந. சி. சின்னசாமி செட்டியார், கிருஷ்ணசாமி முதலியார் அ. பொன்னுசாமிபிள்ளை,

**1-ரூ. கொடுத்தவர்கள்.**

ஸ்ரீமான்கள் வ. நாராயணசாமி முதலியார், அ. துக்கா செட்டியார், ராஜமாணிக்க முதலியார், மகமத்யாகுப் சாயபு, R. நரசிம்மலு நாயுடு, சோமு முதலியார், ரங்கசாமி முதலியார், சோ. அருணாசல செட்டியார், மு. ஏழுமலைய பிள்ளை, கர்ணம் பொன்னுசாமி பிள்ளை, P. பாலகிருஷ்ண நாயுடு, சாரங்கபாணி முதலியார், அ. ராமச்சந்திரம் பிள்ளை, சுப்பராய முதலியார், ந கி. ரத்தினவேல் முதலியார், நா. துரைசாமி பிள்ளை, மு ஆரிமுத்துபிள்ளை விஸ்வநாத முதலியார், அப்துல்கபூர்சாயபு, அய்யாசாமி முதலியார், ரத்தினவேல் பிள்ளை, கோ. கோபாலகிருஷ்ணசெட்டியார், சு. பாலசுந்திர செட்டியார், C. சிவப்பிரகாசம் முதலியார்.

**சில்லரை வரவு.**

இதர அபிமான அன்பர்களால் ரூ. 24. ஆக ரூபாய் 528 வசூலாயிருக்கிறது.

இன்னும் ரூபாய் 50. சேரக்கூடியதாக இருக்கலாம் எனத்தெரிகிறது. ஒரு நிருபர்

## சேலம் ஸ்ரீமான் ராவ்சாஹிப் எஸ். எல்லப்ப செட்டியார் அடுத்த சட்ட சபையில் கேட்கவிருக்கும் கேள்விகளும் தீர்மானங்களும்.

**I. குடிதண்ணீர் வசதி:—**

(a) சேலம் ஜில்லாவில் முக்கியமாக திருச்செங்கோடு ராசிபுரம் ஒசூர் தாலூகாக்களில் குடிப்பதற்கு தண்ணீரில்லாமல் ஜனங்கள் கஷ்டப்படும் சங்கதி தெரியவருமா?

(b) ஜலக் கஷ்டத்தினால் ஏற்படும் காலரா நோயால் 1924—25ம் வருஷத்தில் 3374 மரணங்களும், 1925—26ம் வருஷத்தில் 2870 மரணங்களும் சேலம் ஜில்லாவில் ஏற்பட்டிருப்பது தெரியவருமா?

(c) சேலம் ஜில்லாவில் எத்தனை ஆதி திராவிடர் கிராமங்களுக்கு குடிக்கும் தண்ணீர் வசதி ஏற்பட்டிருக்கிறது? எத்தனை கிராமங்களுக்கு இல்லை? என்பதை தயவுசெய்து தெரிவிப்பாரா?

(d) 1925—26ம் வருஷத்திலும் 1926—27ம் வருஷத்திலும் சேலம் ஜில்லா போர்டாரால் புது கிணறுகள் வெட்டுவதற்கும் பழைய கிணறுகள் மராமத்து செய்வதற்கும் எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறதென்பதை சொல்லக்கூடுமா?

(e) அதற்காக மேல்கண்ட இரண்டு வருஷங்களிலும் கவர்ன்மெண்டாரால் இந்தஜில்லாவுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லுவாரா?

(f) சேலம் ஜில்லாவில் குடிக்க ஜலமில்லாமல் ஜனங்கள் படும் கொடூரமான கஷ்டத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு 1927—28ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் கவர்ன்மெண்டார் போதுமான பணம் ஒதுக்கி வைப்பார்களா?

**II. மதுவிலக்கு.—**

(a) சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகாவில் எத்தனை வருஷமாய் சாராயக்கடைகள் மூடப்பட்டிருக்கின்றன?

(b) ஷை கடைகளை மூடியதால் ஜனங்களுக்கு ஒருவித கஷ்டமும் கெடுதலும் உண்டாகவில்லை என்பதை கவர்ன்மெண்டார் அறிவார்களா?

(c) இதேமாதிரி சேலம் ஜில்லாவில் இதர தாலூகாக்களிலும் ஷை கடைகளை மூட ஏதாவது யோசனையுண்டா?

(d) சேலம் ஜில்லாவில் 1922ம் வருஷத்திலும், 1926ம் வருஷத்திலும் முறையே எவ்வளவு கள்ளுக்கடைகள் இருந்தன என்பதையும் அதினால் உண்டான வருமானத்தையும் தயவுசெய்து தெரிவிப்பார்களா?

**III. நீர்ப்பாசனம்:—**

[a] சேலம் ஜில்லா ஓமலூர் தாலூகாவில் தொப்பை ஆற்றின் நீர்ப்பாசன தேக்கம் விஷயம் கவர்ன்மெண்டாரின் யோசனையிலிருந்ததுண்டா?

[b] ஓமலூர் தாலூகா ஜனங்களிடமிருந்து மேல்கண்ட விஷயமாய் மகஜர் வந்திருக்கிறதா?

[c] அப்படியானால் இப்போது அந்த விஷயம் எந்த நிலைமையிலிருக்கிறது என்பதை தயவு செய்து கவர்ன்மெண்டார் தெரிவிப்பார்களா?

### இவற்றைப்பற்றிய தீர்மானங்கள்.

1 சேலம் ஜில்லாவில் குடிக்கும் தண்ணீருக்காக ஜனங்கள் படும் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு 1927—28ம் வருஷத்திய பட்ஜட்டில் குறைந்த பக்ஷம் 50,000 ரூபாயாவது சேலம் ஜில்லாவுக்கு கொடுக்கவேண்டுமாய் இந்த கவுன்சில் கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்கிறது.

2 சேலம் ஜில்லாவில் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய வசதிகளை தீரஆலோசித்து ரிபோர்ட் செய்ய உத்தியோகஸ்தர்களும், உத்தியோகமில்லாதவர்களும் அடங்கிய ஒரு கமிட்டியை நியமிக்கவேணுமாய இந்த கவுன்சில் கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்கிறது.

3 சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகாவில் சாராயக்கடைகளை மூடினதுபோல் சேலம் ராசிபுரம் இந்த தாலூகாக்களிலும் 1—4—27 முதல் மூடவேண்டுமாய் இந்த சபை கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்கிறது

4 சேலம் ஜில்லாவில் 1—10—27 முதல் கொண்டு இப்போதிருக்கும் கள்ளுக்கடைகளை 100க்கு 25 விதம் குறைக்கவேண்டுமாய் இந்த சபை கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்கிறது.

---

### மாரண்டஹள்ளி.

25-1-27-ந் தேதியில் இவ்வூர் முன்சீப் சாவடியில் சுகாதார வாரகொண்டாட்டத்திற்காக யூனியன் போர்டு பிரசிடெண்டும், மிட்டாதாருமான ஸ்ரீமான் இரத்தின உடையாரவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடி ஷை கொண்டாட்டத்திற்கு பிப்ரவரி மாதம் 13, 14-ந் தேதிகளில் மிட்டாதார் ஸ்ரீமான்பசுவையர் அவர்கள் தலைமைவகிக்குமாறும், கடைசி வாரத்தன்று தர்மபுரி தாலூகாபோர்டு பிரசிடெண்டு D, A. கந்தசாமி செட்டியாரவர்களை வரவழைக்க வேண்டுமாயும், தலைமை வகித்த பிரசிடெண்டு 40 ரூபாயும் ஐக்கியநாணய சங்கத்தார் 10 ரூபாயும் இதனபொருட்டு நன்கொடை அளித்தமைக்கு நன்றி செலுத்துவதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று ஒரு நிருபர் நிவிக்கிருர்.

## நாகபட்டணம் ரயில்வே தொழிலாளர் சங்கம்.

19-1-27-உயில் தென்னிந்திய ரயில்வே ஏஜண்டு துரையவர்களுக்கு அடியிற் கண்ட விஷயங்களை விண்ணப்பித்திருப்பதாக காரியதரிசி A அடைக்கலசாமி பிள்ளை எழுதுகிறார்.

**வீட்டுவசதி:—** லேபர் கமிஷனர் துரையவர்கள் மத்தியஸ்தம் செய்தபொழுது வீட்டுவசதியைப்பற்றி யார் யார் எந்தெந்த மாதிரியான வீடுகள் கேட்கிறார்களோ அவரவர்களுக்கு சம்பளப்பாகுபாட்டைக் கவனியாமல் அந்தந்த மாதிரி வீடுகள் கொடுக்கப்படுமென்று தாங்கள்சொல்லியது தங்களுக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகிறேன். அப்படியிருக்க இப்பொழுது 17-1-27-ல் பொன்மலைக்கு மாற்றப்பட்ட பஸ்ட் பாட்சி (1st Batch) வேலைக்காரர்களுக்கு சம்பள விகிதத்திற்குதக்குந்தபடி அதாவது தினம் 1-க்கு ரூ. 2—8—0-ம் அதற்குமேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு F. டைப் வீடுகளும். அதற்கு குறைவான சம்பளம் வாங்குகிறவர்களுக்கு C. & B டைப் வீடுகளும் கொடுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இதனால் பெரிய குடும்பமாயுள்ள வேலைக்காரர்களுக்கு மிகுந்தகஷ்டமேற்படுகிறதென்று அவர்கள்முறையிட்டு தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். இதுபற்றி நாம் யோசிக்குமளவில் ஒருவன் குறைச்சலான சம்பளம் வாங்கக் கூடியவனாகவும், பெரிய குடும்பஸ்தனாகவுமிருக்கலாம். அவனுக்கு B & C டைப் வீடு கொடுக்கப்பட்டால் அதில் எத்தனை பேர் வாசஞ்செய்யக்கூடுமோ அவர்களைத்தவிர்த்து மற்றவர்களை என்செய்வது என்பதுதான் தெரியவில்லை. அதுபோலவே அதிகச் சம்பளம் வாங்கும் ஒருவன் சிறிய குடும்பஸ்தனாக இருக்கவுங் கூடும். அவனுக்கு F டைப் வீடு வேண்டுவதனாவசியமாயிருக்கலாம் அதுவுமின்றி வீட்டுக்குத் தகுந்தபடி அதிக வாடகை கொடுக்கச்சக்தியுள்ளவர்கள்மட்டுமே பெரிய வீடாகக் கேட்பார்களேயன்றி எல்லோருமே அம்மாதிரி கேட்பார்களென்று தாங்கள் நம்பவேண்டுவது அவசியமில்லை ஆகையால் தாங்கள் தயவுசெய்து வேலைக்காரர்களின் குடியிருப்புக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டி அவரவர்கள் எந்தெந்த வீடுகள் கேட்கிறார்களோ அந்தந்த வீடுகளை கொடுக்கும்படி உத்திரவு செய்யவேண்டி வணக்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

**கக்கூஸ்:—** இதுவிஷயம் மிகவும் அசௌக்கியமாயிருக்கிறதென்றும், அதிகமான கக்கூஸ் கட்டித்தரவேண்டுமென்றும் லேபர் கமிஷனர் விசாரணையின்போது நீண்ட நேரம் விவாதம் நடந்ததென்பது தங்களுக்குத் தெரிந்ததொன்றும். அதன் பிறகு 8-12-26ல் என்னால் வெளியிடப்பட்ட அச்சுப்பிரதியிலும் இது விஷயம் நன்றாய் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது நேரில் பார்த்தவளவில் C டைப்பில் குடியிருக்கிறவர்களின் 4 பிளாக் அதாவது 24 வீட்டுக்காரர்களான ஆண், பெண் உள்பட குறைந்தது 120 பேர்களுக்கு ஆண்களுக்கு 6 இருப்பிடமும் பெண்களுக்கு 6 இருப்பிடமுமுள்ள ஒரு கக்கூஸ் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எவ்வளவு கஷ்டம் விளைகிறதென்பதை சற்று யோசித்தால் தெரியாமற்போகாது. காலையில் 7 மணிக்குள் 24 வீட்டுக்காரர்களாகிய ஆண் பிள்ளைகளும் காலைக்கடன் முடித்துக்கொண்டு வேலைக்குப்போக தயாராகவேண்டும். அதற்குள் அவர்களுக்கு ஆகாரம் முதலியன சித்தம் செய்து சமர்ப்பித்து அவர்களை வேலைக்கு அனுப்பிவைக்கவேண்டிய ஸ்திரீ ஜாதிகளும் தயாராகவேண்டும். இதன் நடுவில் பிள்ளைகுட்டிகள் தாய் தந்தையர்கள் இன்னும் மற்றநேகர்களும் அதே சமயத்தில் அவரவர்கள் காலைக்கடனை முடிக்க கட்டாயமாய் நேரிடினும் நேரிடும். இவ்வளவு பேர்களும் குறிப்பிட்ட கொஞ்சநேரத்திற்குள் ஆண்களுக்கொரு பக்கமும், பெண்களுக்கொரு பக்கமும் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் எட்டிப்பார்த்தால் நன்றாய் தெரியும்படியான விதமாய் நடுவில் ஒரு அடைப்புமுள்ள மேற்சொன்ன ஒரே கக்கூஸில் மானம் அவமானத்தை விட்டுவிட்டு வெளிக்குப் போகிறதென்றால் எப்படி சாத்தியமாகும்? என்பதை கேட்கவேண்டியது அவசியமாயிருக்கிறது மேற்சொன்ன கக்கூஸ் இருக்கிறயிடத்திற்கு பக்கத்திலேயே போதுமான காலி நிலங்கள் இருக்கிறதால் அதே விதமான இன்னொரு கக்கூஸ் கட்டி ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் தனித்தனியாக இருந்தால் அவ்வளவு கஷ்டமின்றி கொஞ்சம் சவுகரியமாயிருக்குமென்பதை நான் சொல்லத் தேவையில்லை. ஆகையால் தாங்கள் தயவுசெய்து இந்த சுகாதார விஷயத்தை உடனே தகுந்தபடி கவனித்து இப்பொழுது கட்டியிருக்கிற ஒவ்வொரு கக்கூசுக்குப் பக்கத்திலும்மற்றொவ்வொரு கக்கூசு கட்டிக்கொடுக்க உத்திரவு செய்யவேண்டி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

## போலூர் திராவிட சங்கம்.

போலூரில் ராவ்பஹதூர் காரார் கிருஷ்ணசாமி நாயக்கர் தலைமையில் கூட்டம்கூடி "திராவிட சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. தாலூகா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் துப்புசாமி முதலியார் தலைவராகவும் யூனியன் போர்டு பிரசிடெண்டு உபதலைவராக ஆ. நாதமுனி முதலியார் காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர் எனவும் ரூ. 101 வசூலாயிற்றென்றும் காரியதரிசி அறிவிக்கிறார்.

## கன்னட பலிஜய சங்கம், ஈரோடு.

ஷை பெயருடன் ஈரோட்டிலுள்ள கன்னட பலிஜய சமூகத்தாரடங்கிய சங்கமொன்று 29—1—27 சனிக்கிழமை ஸ்ரீமான் ந. கரிவரதசாமி நாயக்கர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. ஷை சங்கத்திற்கு ஸ்ரீமான் ந. கரிவரதசாமி நாயக்கர் அவர்கள் தலைவராகவும், ஸ்ரீமான் செ. மு. சிக்கைய நாயக்கர் அவர்கள் உபதலைவராகவும், ஸ்ரீமான்கள் வெ. மு. கிருஷ்ணசாமி நாயக்கர், ஈ. வெ. வாசுதேவ நாயக்கர் காரியதரிசிகளாகவும், ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நயாக்கர், சா. ராமசாமி நாயக்கர், ரா. வி. முத்து நாயக்கர், ரா. துரைசாமி நாயக்கர், நா. வெங்கிடராம நாயக்கர், வெ. எல்ல நாயக்கர், கே. கேத்த நாயக்கர் ர. குருசாமி நாயக்கர், ந முத்துரங்கு நாயக்கர், ரா. கிருஷ்ணசாமி நாயக்கர், கு. ராமசாமி நாயக்கர் ஆகியவர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாகவும், ஸ்ரீமான் அ. கோ. இராமசாமி நாயக்கர் பொக்கிஷதாரராகவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று காரியதரிசி ஸ்ரீமான் ஈ. வெ. வாசுதேவ நாயக்கரறிவிக்கிறார்.

---

பூளைமேடு சர்வஜன வித்தியாசாலை— ஸ்ரீமான்கள் சக்கரலால் பாங்கர், சி, இராஜகோபாலாச்சாரியார், எஸ். இராமநாதன் ஆகிய மூவரும் இவ்விடம்வந்து கதரின் மகிமை; மகாத்மா வருகை, பணமுடிப்புக் கொடுக்கவேண்டிய அவசியம் முதலியனபற்றி விளக்கிக் கூறினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.


### க்ஷய சம்மாரி.

இது ஒரு மஹானால் எமக்கு அளிக்கப்பட்டது. 20-வருஷங்களாய் பரிக்ஷிக்கப்பெற்றது, க்ஷயம், சுவாசகாசம், இருமல், இளைப்பு இவைகளை அறவே போக்கடிக்க ஓர் கற்பம் போன்றது. ஒருவாரம் மருந்தில் குணம் தெரியும் பத்தியமில்லை.

1-வாரம் மருந்து விலை ரூ. 1—4—0 15-நாள் மருந்து விலை ரூ. 2—0—0

### மேகராஜாங்க மதனவிந்தாதி லேகியம்.

மேகசம்மந்தமான கொடிய வியாதிகளையும், வீரிய நஷ்டம், சொர்ப்பனஸ்கலிதம், ஞாபகக்குறைவு, அசதி, சோம்பல், கைகால் நடுக்கம், வாந்தி, அஜீரணம் முதலியதுகளை நீக்கி, நல்ல பசியும், ஜீர்ணசக்தியை கொடுத்து தளர்ந்துபோன நரம்புகளை பலப்படுத்தி தாதுபுஷ்டியும் ஆண்மையும் முகதேஜசும் உண்டாக்கும் பத்தியமில்லை.

1-சேர் லேகியம் ரூ. 5—0—0 அரை சேர் லேகியம் ரூ. 2—8—0

### சர்வமேகபரிமளாதிஸ்நானத்தைலம்.

இத்தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர கண் எரிச்சல், மண்டை குத்து, ஒற்றைத் தலைவலி, மயிர் உதிர்தல், பொடுகுனை கொதிப்பு, மயக்கம், அஸ்தி ஜுரம், நீர் எரிச்சல், வெட்டை, கைகால் எரிவு முதலிய சர்வமேக ரோகத்தையும் நீக்கி ரத்தவிர்த்தியை கொடுக்கும் பத்தியமில்லை.

24-அவுன்ஸ் தைலம் விலை ரூ. 5—0—0 12-அவுன்ஸ் ரூ. 2—8—0

ஷண்முகாநந்தர் வைத்தியசாலை,
14-106 பெரிய கடை வீதி,
கோயமுத்தூர்.

## செய்தித் திரட்டு.

திருப்பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயம் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் 11வது ஆண்டு நிறைவுவிழா—அட்சயஹூ மாசி மீ 6, 7, 8ந் தேதி, 1927ஹூ பிப்ரவரிமீ 17, 18, 19-ந் தேதி ஆகிய வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள் ஆலயத்துக்கருகில் புதிதாய் அமைத்துள்ள கொட்டகையில் பல்லாவரம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களுடைய தலைமையின்கீழ் நடைபெறும், அக்காலத்து தங்கள் நண்பர்களுடன் விஜயம்செய்து இன்புறுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்வமயம் திருவாளர்கள் அ. சி. கருணாலய சுவாமிகள், அ. சரவண முதலியாரவர்கள், ம. ரா. குமாரசுவாமி பிள்ளையவர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பி. ஏ. எல். டி., சென்னைய நாயகர் அவர்கள், மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள், இ. சொ. சாந்திமதிநாத பிள்ளையவர்கள் பி. ஏ., சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பி. ஏ. ஆகியவர்கள் முறையே திருத்தொண்டர்பணி, 1 அழுதடியடைந்தவன்பன் 2 அப்பூதியடிகள், 1 அருளின் அருமையும் பொருளின் பெருமையும் 2 சேர்தனூர் அருமையும் வேந்தனூர் பெருமையும், 1 தாயினும் நல்ல சங்கரன், 2 தமிழரும் தமிழும், குருபக்தி, 1 பக்தியோகம் 2 சமயம், தமிழர் திருமறை, தற்காலசமயநிலை என்பன பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

வரவேற்புக்கழக அமைச்சர்கள் ஸ்ரீமான் பொள்ளாச்சி எஸ். பி. இரத்தினசபாபதி கவுண்டர் குனியமுத்தூர், வி. சோமசுந்தரம் பிள்ளை போடிபாளையம், பி. நஞ்சப்ப கவுண்டர் அட்டக்கல்வலசு, எம். சுப்பண்ண கவுண்டர் குப்பியபாளையம் மணியம் நஞ்சப்ப கவுண்டர் என சங்கத் தலைவர் உயர்திருவாளர் எஸ். மாணிக்க சுவாமிகள் அறிவிக்கிறார்.

* * *

பேரூர் சத்வித்தியா சன்மார்க்கசங்க ஆண்டு நிறைவுவிழாவுக்கு ஆண்டுதோறும் ஏராளமான மக்கள் குழுமிப் பயன் பெற்றும் பெறவுமிருக்கின்றனர். இவ்வூரில் வேறு சாப்பாட்டு விடுதிகளில்லாமையாலும் சங்கத்தாரது சாப்பாடு சம்பந்தமான ஏற்பாடு திருப்திகரமாயில்லாததாலும் ஒரு ஆண்டு வந்தவர் மறுமுறை வர வெறுக்கின்றனர். ஆகலால் சங்கத்தாரும் ஏனைய இச்சங்க அன்பர்களும் இவ்வாண்டு தக்க ஏற்பாடு செய்வார்களாக என்று காணியாம்பாளை ஸ்ரீமான் கே. ஆர். பொன்னுசாமி பிள்ளை அறிவிக்கிறார்.

* * *

நிகழும் அட்சய ஆண்டு தைத்திங்கள் 24-உ குடியாத்தம் காங்கிரஸ் தொண்டர் ஸ்ரீமான் எம். சாமிநாதனுக்கும் திருக்குறள் போதகாசிரியர் ஸ்ரீமான் முருகேச முதலியாரின் குமாரி ஸ்ரீமதி சிவகாமிசுந்தரிக்கும் திருமணம் நடைபெறுமென ஸ்ரீமான் எஸ். மயூரநாதன் அறிவிக்கிறார்.

* * *

மானாமதுரைக்கடுத்த அரிசிபாளையம் சேலம். 30—1—27உ செவ்வாய்ப்பேட்டை முனிசிபல் ஆரம்ப பாடசாலைத் தலைமை உபாத்தியாயினி ஸ்ரீமதி கே. பி. நாராயணியம்மாளவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஸ்ரீமான்கள் கொ. ரா. பாலசாமி செட்டியார் பி. ஏ. பி. எல் தலைவராகவும், போ. ச. முத்துசாமி சாஸ்திரிகள் [பார்ப்பனரல்லாதார்] உபதலைவராகவும், எஸ். வி. நம்மாழ்வார் காரியதரிசியாகவும், அ. நரசிம்மராஜா உதவி காரியதரிசியாகவும், கே. வி. மன்னார் செட்டியார் பொக்கிஷதாரராகவும் வேறு 15 கனவான்கள் நிர்வாக கமிட்டி உறுப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனரெனவும் விதிகளிற் சில திருத்தியமைக்கப் பெற்றனவெனவும் ஸ்ரீமான் எம். சென்னகிருஷ்ண அறிவிக்கிறார்.

* * *

சிதம்பரம்:— 5ந்தேதி மாலை 4-15 மணிக்கு சிதம்பரம் நந்தனார் ஸ்கூலில் ஸ்ரீமான் எஸ். எல். ஆர். எம். எஸ் செட்டியப்ப செட்டியார் முதன் மந்திரி டாக்டர் பி. சுப்பராயனுக்கு ஒரு தோட்ட விருந்து நடத்துவார்.

தென்ஆற்காடு ஆதித்திராவிட சபை:— இச் சபையின் ஆதரவில் ஒரு ஆதித்திராவிட மகாநாடு 5—2—27ந் தேதி சனிக்கிழமை பகல் 12 மணிக்கு சிதம்பரம் நந்தனார் மடத்தில் ஸ்ரீமான் வி. ஐ. முனுசாமி பிள்ளை அவர்கள் எம். எல். சி. தலைமையில் நடைபெறும் என்று ஸ்வாமி சகஜாநந்தா அறிவிக்கிறார்.

* * *

வட ஆற்காடு ஜில்லா செய்யாறு தாலூகா. புரிசை கிராமத்தில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கக் கிளையொன்று எம். நாராயணசாமி முதலியாரவர்கள் தலைமையில் நிறுவப்பட்டது. திருவாளர்கள் செங்கல்வராய முதலியார் எம். நாராயணசாமி முதலியார் தலைவர்களாகவும், ம. துரைசாமி முதலியார் காரியதரிசியாகவும், சீ. ரா. குப்புசாமி கவுண்டர், வி. ராமலிங்க முதலியார், பஞ்சாட்சரத் தம்பிரான், எம். பெருமாள் (ஆதிதிராவிடர்) நிருவாகஸ்தராகவும் நியமிக்கப்பட்டனர். பலர் அங்கத்தினராகச் சேர்ந்தனர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் கூட்டங்கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.


காதலர்காள்! காதல் ரசம்! முந்துங்கள்!

# ராஜ ராஜம்

இன்பரசம்! அன்புமயம் ஆய்விட்டது

அல்லது

## காதலின் வெற்றி

இதில் இளம் காதலர்களின் அந்தரங்கக்காதலின் பெருமையும் சிறுமையும் ரகசியக் கடிதங்களின் தன்மையும் மற்றும் தற்கால உலக அந்தரங்க பல ரகசியங்களும், மற்றும் காதலர்களின், பல அரியமர்மங்களும், இன்பமும் நன்மையும் ஊட்டும் இன்ப ஊற்றாகவே சிறந்து விளங்கும். இச் சிறிய அழகிய நூலின் விலை அணா 6 தான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒன்று பெறலாம்.

| | |
|---|---|
| கொக்கோக கோலம் பல உருவப்படங்களுடன் ... | 2—4—0 |
| ஜீவ வஸ்ய பரம ரகஸ்யம் (மானிட வசியம்) ... | 3—0—0 |
| மஹேந்திர ஜாலம் ... | 0—12-0 |
| பண்டிதை மெஸ்மரிஸா ... | 1—8—0 |
| இங்கிலீஷ் சம்பாஷணை புத்தகம் ... | 2—0—0 |

N. B.—மற்றும் எல்லா விதமான புத்தகங்களும் கிடைக்கும். வெளிநாட்டிலுள்ளோர் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஏ. என். ராஜா & கோ, (2) ராயபுரம், மதராஸ்.



நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவரவர் அதிர்ஷ்டவசம் அறியலாம் மிதுநிஜம் ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

# இரங்கூன் இரகசியம்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்

செந்தமிழ்ச் சகோதரர்காள் எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழேவைக்கமனமிராது. நாகரீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம், முதலிய அலங்காரமமைந்தது அறிவை விளக்கி அகமகிழச் செய்வது. மோசம் நாசம் கம்பளிவேஷம்போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக் காட்டுவது. அந்நிய தேச ஜீவனம்சு கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைத் துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்திபுகட்டுவது மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப்பரதேசிகள், வழிபறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோலெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0. வி. பி. தபால் செலவு வேறு.

விலாசம்:—பாஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி நெ. 1051, 61, 39-வது கல்லி, இரங்கூன்.

சீக்கிரத்தில் குணத்தைத் தருகிறது.
ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்று
அனுபவத்தில் சிறந்தது.

## மூலாரி கிருதம்.

மலபந்தம், ரத்தம், சீழ், துர்நீர் வருதல், கடுப்பு, எரிவுந்தம் வலி
முதலான மூலரோகங்களைக் குணப்படுத்தும்
டப்பி 1-க்கு விலை ரூ. 1—8—0
(வி. பி. கட்டணம் பிரத்தியேகம்.)
விலாசம்:— **ராஜ வைத்திய ஆஸ்ரமம்,**
டாக்டர், M. G. நாராயணசாமி முதலியார். செவ்வாய்ப்பேட்டை, சேலம்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஞ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணு. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கெடுவு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20, 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணு) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணுவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், சண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையி லாவது ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டு மானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31க் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக் கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானுல் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானுல், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனுலும், அவர் பங்கு உடையவரானுல், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிட ரானுல், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வதுபக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.



டிடக்டாஸ் அல்லது
துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனுல் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்துகொள்ளலாம். மேஞட்டார் கண்டு பிடித்த கருவி இது. பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்".

பாரீஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மேடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனுதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.



## திருப்பூர்
## கத்தர் பனியன்கள்.

கைராட்டினத்தில் நூற்ற நூலினுல் கை தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு செய்யப்பட்டது.

உங்களுக்கு வேண்டிய சுத்த கத்தர் பனியன்களுக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். 28, 30, 32, 34 இஞ்சு சைஸ்களில் கிடைக்கும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரங்களுக்கும் வியாபார முறைகளுக்கும் எழுதி தெரிந்துகொள்ளுங்கள்.

மா. வெ. கருப்பண்ண செட்டியார்,
கதர் ஸ்டோர்ஸ், திருப்பூர்.
(தென் இந்தியா.)

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

### மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

### மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளேயும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

### மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---



**1000 தொழில் முறைகள்.**

கூலிக்காரன் தொழில் முறைகளைக் கற்றுத் தன் முயற்சியால் சீமானுயினன்.

சர்ப்பத்து, ஐஸ்கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம்பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப்பு, செண்டு, கூந்தல் தைலம், பற்பொடி, தேள் விஷ சஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனாம். எமது கைத்தொழில் புத்தகளின் கேட்லாக் இனாம்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.

---



**பெட்ரோமாக்ஸ் லைட்.**

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.